'குடிஅரசு'

Vl. No. 24 14 June 1928

TL
ஊ211, N28KN
N28·1'24
189007

Reg. No. M. 2324. தனிப்பிரதி ரூ. 0 3 0

கலா நிலயம்

வியாழன்தோறும் வெளிவரும்
வாரப் பத்திரிகை.

வருஷ சந்தா
இந்தியா, பர்மா, ஸிலோன் ரூ. 7 8 0
புற நாடு ... ... ரூ. 9 0 0

காரியாலயம்:—
No. 11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம், சென்னை.

Vol 1.] 1928ளு ஜூன்மீ 14உ [No. 24.

REGISTRAR OF ... 20 NOV 1928 ... MADRAS

பொருளடக்கம்.

		பக்கம்.
1.	தலையங்கம் (Leader)	461
2.	காந்திமதி (A Novel) T. N. சேஷாசலம் B. A., B. L.	463
3.	சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் T. P. மீனாக்ஷிசுந்தரன் M. A., B. L.	464
4.	தமிழ்ப் பாடம்	467
5.	இலக்கிய எற்ற ஆராய்ச்சி E. T. சொக்கம்மாள் B. A., L. T.	470
6.	மாசில்வீணையும் V. நாராயண ஐயர் M.A., M.L.	472
7.	சொல்லாட்டம்	473
8.	கம்பராமாயணம் T. N. சேஷாசலம் B. A, B. L.	474
9.	வர்த்தமானம்	479

கலா நிலயம்.

இரக்க முண்டெனின் ஈமின்.

189607

பிஜி நேட்டால் முதலிய அந்நிய நாடுகளுக்குச் சென்று திரும்பிவரும் கூலி வேலைக்காரர்களைப் பார்த்தவர்கள் எவரும், அவர்களது நிலை பரிதாபகாமானதென்றும் அவ்வயல்நாட்டு வெள்ளையர்கள் இவர்களைச்சரிவர நடத்துவதில்லை யென்றும், இரக்கமின்றி இவர்களிடம் விலங்குகள் போல் வேலை வாங்கிக்கொண்டு பிறகு உதறிவிடுகிறார்களென்றும், தாம் நடக்கும் தெருவில் இவர்கள் நடக்கப்படாது என்பது போன்ற நிந்தனைக்கு ஆளாக்குகின்றனர்களென்றும், ஒன்று மறியா இப்பேதைகளை வஞ்சித்துக் கப்பலேற்றுகின்ற கங்காணிகள் பாதகர்களென்றும், நமது அரசாங்கத்தார் நடுநிலையற்றுப் பிற தேசத்தவர்கள் இக்கூலிகள்பால் இழைக்கின்ற கொடுமையைத்தடுப்பதில்லை யென்றும், சுயராஜ்ய உரிமை யிருந்தால் அவ்வயல் நாட்டார் நம் நாட்டிலிருந்து கூலிகளாகப் போகின்றவர்களை மரியாதையுடனும் கொடுமையில்லாமலும் நடத்தும்படி நயத்தாலும் பயத்தாலும் நாம் செய்துவைக்கலாமென்றும், இன்னும் இவைபோன்ற மொழிகளும் பேசவேமாட்டார். கூலிகள் வந்து இறங்குகின்ற ஒரு துறைமுகத்தில் கப்பல் வந்த தினம் போய் நின்று பாருங்கள். ஒருவர் உடலிலாவது ஒருபிந்து இரத்தம் இருப்பதாகக் காணவில்லையே. இளைத்து மெலிந்து தேகம் வளைந்து தோல்வறண்டு கண் பழுங்கிக் கால்களென்ற இரண்டு கொம்பின்மேல் கிழிந்துபோன கோணிப்பை ஒன்று ஊருவது போலவே ஆண் பெண் சிறியோர் முதியோர் அனைவரும் தோன்றுகின்றனர். திரைகடலோடி இவர் தேடி வந்த திரவியம் எல்லாம் கள்ளிப்பெட்டி, கிழிந்த பாய், தகரப்பாத்திரம் ஒன்று ஊன்றுகோல் மூங்கில்தடி இவைகளோடு அடங்கிவிட்டன. இவர்களது கதி மிகவும் பரிதாபமாயிருக்கின்றது என்று சொல்லிச் சொல்லி அவ்வயல் நாட்டார் அடாது செய்கின்றனரென்றும், நமது அரசாங்கத்தார் அவர்களைக் கேட்பதில்லை என்றும் இவர்களைக் காப்பதில்லை யென்றும் வாது செய்து இக்கூலிகளுக்கு நன்மை புரிகின்றதெனும் கருத்தோடு விவகரிக்கின்ற நாமே பார்க்கப்போனால் இரக்கமற்றவர்களென்று எண்ணவேண்டி யிருக்கின்றது.

எனினும் அயல் நாட்டுக்குப்போகின்ற கூலியாட்களின் கதியைச் சிறிது செம்மையாக்க வேண்டுமென முயல்பவர்கள் உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும் கபடர்கள் என்று நாம் சொல்வதாக எண்ணவேண்டா. எம் கருத்து அதுவல்ல. உண்மையிலேயே இவர்கள் அக்கூலிகளுக்கு ஒரு நன்மை எய்துவிக்கவேண்டும் என்று முயல்பவர்களே. முயற்சி செய்கின்றோமெனினும் அவர் பால் நமக்கு இரக்கமில்லை.

இருக்குமெனின் நாமேன் இவர்களைக் கூலி வேலை செய்ய அயல் நாட்டிற்கு அனுப்புகின்றவர்களாகின்றோம். அயல் நாட்டார் இவர்களை முற்றிலும் அதர்மமாகவே நடத்துகின்றார்கள் என்பது உண்மையே என்று கொண்டாலும், இவர்கள் அந்த அதர்மத்திற்கு ஆளாகும்படி அங்குப் போய்த்தான் தீரவேண்டுமென்ற சட்டம் எங்கும் இல்லையே. நாமே கொண்டுபோய் நம் நாட்டுச் சகோதரர்களை அந்நியர் கையிலே காட்டிக்கொடு

த்துவிட்டுப் பிறகு, அவ்வந்நியர் துஷ்டர்களானாலும், அவர்களை வைவதற்கு நமக்கு வாயேது! 'சரியாய் இரக்கத்தோடு இக்கூலிகளை நடத்துங்கள்' என்று சொல்வதற்கு நமக்கு என்ன உரிமையிருக்கின்றது.

ஓர் உதாரணம் எடுத்துக்கொள்வோம். நான் என்னுடைய தாய்க்குச் சோறு போடவில்லை. அவள் பசி தாங்கமாட்டாமல் வேறொருவனிடத்தில் போய் வேலைக்கு அமர்கின்றாள். அவளை மரியாதையாய் அவன் நடத்துவதில்லை. மற்றவித கஷ்டங்களும் கொடுக்கிறான். இதைக்கண்டு நான் ஊர் கூட்டிச் சபைகூட்டிப் 'பிரசாரம்' பண்ணி அவன் அவளைச்சரியாய் நடத்தாதற்குக் கடிந்து கோபித்து முறையிடுவேனாயின், என்ன நினைப்பீர்? என்னை என்ன செய்வீர். இந்த உதாரணத்திற்கும் இந்நேடால் கூலிகளின் கதிக்கும் ஒரு பேதமில்லை. அன்னைக்குச் சோறு போடாததுபோல் நாமிவர்களுக்குச் சோறு போடாமல் நாட்டைவிட்டுத் துரத்திவிட்டுப் பிறகு அவர்கள் கதி அப்படியாயிற்றே என்று உட்கார்ந்து அழுகின்றோம். இந்தக் கொடுமை அயல் நாட்டார் செய்கின்றனரே எனச் சிலரை வைகின்றோம். சுயராஜ்யம் என்னும் ஏதோவொன்று எங்கிருந்தோ வந்தால் இந்தக் கூலியாட்களின் நிலை நல்லதாம் என இலவு காக்கின்றோம். நாம் காட்டிய உதாரணம் பொருத்தமுடையதெனின், அதனில் தர்க்கக் குற்றம் இல்லையெனின், நாம் எய்திய முடிவும் உண்மையன்றி வேறாவது இயலாது. ஆதலின் அவ்வுதாரணத்திற்குக் கூறத்தக்க மறுப்புகளைச்சொல்லி அமைதி ஆராய்வோம்.

இந்தியாவிலுள்ள வறுமையால் எவ்விதத்தினும் இங்கு உணவுநாண முடியாமல் இவ்வேழை மக்கள் அயல்நாடுபோக வேண்டி நேர்கின்றதாதலால் நாம் அவர்களைத் தாய்க்குச்சோறு போடாது துரத்துவதுபோல், துரத்தினோம் என்று எவ்வாறு கூறலாம் என யாவரும் நம் உதாரணத்தின் பொருத்தத்தை முடுகி மறுப்பர். இது விலக்கரிய மறுப்பைப்போல் மேற்பார்வைக்குத் தோன்றினாலும் உற்று நோக்க நோக்கக் கரைந்துவிடும். முதலாவது, இங்கிலாந்தின் செல்வத்தைப்போல் இந்தியாவின் வறுமையும் ஒரு மாயை. ஏழைகளுக்குச் சோறு அகப்படாதபடி என்ன வறுமை! ஜனத்தொகைக்குப் போதுமான அளவு உணவு விளைவில்லா வறுமை என்பரோ, அல்லது வாங்குதற்குச் சிலர் கையில் பணமில்லை என்ற வறுமையோ? முன்னதாயின், ஓரளவு இந்தியாவிலிருந்து தானியங்கள் ஏற்றுமதியாவதற்கு என்ன சொல்வது! உலகத்திலே உயிர்களுக்குப் போதுமான உணவு உலகத்திலே ஒரு பாகத்திலில்லாமற்போனால் மறு பாகத்தில் விளைந்தே தீர்கின்றது. ஆயின் இங்குப் போதாத உணவை அங்கிருந்து வரவழைத்துக் கொள்ளலாமே. மற்றுப் பணமில்லா வறுமை எனின் யார் கையில் இல்லை? ஏழைகளின் கையில் இல்லை என்பது உண்மைதான். அவர்களுக்காகப் பரிந்து அயலாரைக் கோபிக்கின்றவர்கள் கையிலுமா இல்லை? மோட்டார் வண்டி ஒன்றின் மூலமாய்த் தினப்படி அயல்நாட்டிற்குப் போகின்ற பணத்தைக்கொண்டு கூலிவேலை செய்யப் பிற தேசங்களுக்குப் போகத் தலைப்படுகின்றவர்கள் அத்தனை பேரையும் நிறுத்தி உட்காரவைத்துச் சோறுபோட்டுக்கொண்டிருக்கலாமே. கொலம்பஸ் கோழிமுட்டையை நிற்கவைத்ததுபோல் இது மிகவும் சுலபமும் சாதாரணமுமான வழியாயிற்று. அவ்வளவு சுலபமாய் இருப்பதாற்றான் ஒருவருக்கும் தோன்றுவதில்லையோ, யாதோ! "நான் கஷ்டப்பட்டுப் பணம் தேடினேன், அநுபவிக்கின்றேன். மற்றவர்களை உட்காரவைத்து நான் ஏன் சோறு போடவேண்டும்" என்று கேட்பர். தாயைத் துரத்தின பிள்ளையும் இதே கேள்வி கேட்கின்ற உரிமையுடையவனல்லவா. அவனை மாத்திரம் ஏன் நிந்திக்கின்றீர்கள். "ஆம், நீ தேடிய பொருளை நீயே அநுபவிக்கின்ற உரிமை உளது. மறுப்பாரில்லை. ஆனால் கூலியாட்களின் கதியைப்பற்றி ஒன்றும் பேச வேண்டா!"

பொது தர்மத்திற்கு இம்முறை ஏற்றதென்று நாம் எண்ணுவதோ அல்லவோ என யோசிப்பதற்குள் தனதாய சாஸ்திரிகள் (economists) ஓடி வந்து காரிய சாத்திய வார்த்தை இது வல்லவென்று பரிகசிக்கத் தலைப்படுவர். அது ஒரு படுகொலைச்சாஸ்திரம். ஜனத்தொகை கணக்கெண்ணி இந்தியாவில் கிடைக்கக் கூடிய பணத்தையெல்லாம் கூட்டிப்பார்த்து, இருந்து தின்றால் இது மூன்று தலைமுறைக்குமேல் போதாதாகிவிடும் என்று சொல்லிவிடுவர். ஆகையால்—இந்தத் தலைமுறையிலேயே சோறுபோடாதே என்பது அந்தச் சாஸ்திரமுடிவு. பிறக்கப்போகின்றபேரர்களுக்குப் பசிக்குமே என்று தாய்க்குச் சோறு போடாமல் துரத்துபவனை இகழ்வானேன்! மூன்றுந்தலைமுறை வரும்போது வழிதேடிக் கொள்ளலாம், இருப்பவர்க்கு அன்னமும் துணியும் அளித்துக் காக்க வல்லார் அனைவரும் காத்தற்குரியாரைக் காக்க வேண்டியது தம் கடன் என்று நினையாராயின் நேடாலையும் பிஜியையும் நொந்துகொள்ள வேண்டியதுமில்லை.

ஆயின் இப்பேதைக் கூலியாட்களின் மீது இரக்கம் பாராட்டுகின்ற நாம் அவர்கள் கதி அவலமாகா வண்ணம் செய்வதற்கு இருக்கின்ற வழி அவர்களுக்கு நாமே நம் கைப்பணத்தைச் செலவு செய்தே சோறு போடுவது ஒன்றே வழி. இதனால்கைத்தொழில் சாலைகள் பல இந்தியாவில் நிறுவி அவர்களது வேலையைக்கொண்டு கூலி தருகின்றமுறையை நாம் இங்குக் கொண்டாடிக் கூறுவதாக நினைக்க வேண்டா. அது அரை வயிறு கஞ்சிவார்த்து முழு இரத்தத்தையும் பிழிந்து கொள்கின்ற தந்திரமேயன்றிப் பிறிதொன்றில்லை. தானமாகவே கொடுப்பதில் ஒருபாவமில்லை. தனதாய சாஸ்திரத்திற்குத் தவிர வேறுஎந்தச் சாஸ்திரத்திற்கும் அது விரோதமு மன்று.

யாருக்கு இது செய்ய மனம் வரும் என்று கேட்பர். உண்மையே, ஆயின் வாயும் வாராமல் சும்மா விருப்போம். அல்லது மனம் வருவதற்கு ஏற்றமார்க்கம் எது வென்று ஆராய்ந்து கொள்வோம். இக்கூலியாட்கள் மீது நமக்கு இரக்கம் இருப்பது வாஸ்தவமாயின் வரையாதளிக்க நம் மனம் பண்படுமாறு அமைந்திருக்கின்ற கலைகளின் நெறியில் இன்றே முயல்வம். தனதாயமும் அரசியலும் நாளைக்கு.

காந்திமதி என்னும்
காந்தாரநாட்டுக் கட்டழகி.

(446-வது பக்கத் தொடர்ச்சி)

21. கலவாக் குருதி.

தன்கை வளர்ந்த பிள்ளை மனந்தவித்துப் போவதைக் காணக் கருணாகாருக்கு அடங்காத் துக்கமுண்டாயிற்று. "ஐயோ, பாவம்! இந்தக் குழந்தையை உயரிய நிலையில் வைத்துப் பின் உருட்டித் தள்ளுவது இக்குன்றத் தலைவர்களுக்குத் தருமமா! இவன் சொன்ன தனைத்தும் யான் முன்னரே அறிந்துளேன். முன்னாள் முதற்கொண்டே கந்தன், கலாம் தூண்ட உடன்படுவானேயன்றிக் கடும்போரிற் கைகலவான்.........என்மகன் மனைவியானால் தன்கை வாளிற்கு வன்மை யுண்டென்று இவன் கூறியதில் வாய்மை இருக்குமாயின், அவளைக் கொடாததால் இவனைக் கொன்றபாவம் எனக்கு எய்துமோ!" என்று எண்ணிச் சிறிது கலங்கினவராய்க் கருணாகார் தன்படுக்கை விட்டெழுந்து, கடை மெலிந்தேகும் கந்தனை மீட்டும் கூவி அழைக்குமாறு குடிலின் முன்புறம் போந்தனர். அச்சமயம் கந்தனது உருவம் ஒரு பெரும் பாறைக்குப்பின் மறைவதாயிற்று. விரைந்து சென்று அவனைப் பின்பற்றி நிறுத்த நினைத்தவர் கால்கள் இரண்டடி நடக்குமுன் நின்றன. "இரகு இராமன் அனைய வீரர்தம் குலமுறை கொண்டவனல்லன் யான். எனினும், வெட்கமின்றி இக்கந்தன் மேற்கொண்ட கோழைத்தனம் காண நானுமே நாணுகின்றேன். என் பெண்ணைக் கேட்கின்றானே. பெண்ணுடன் நானென்ன, போராற்றலும் பிறந்தகத்துச் சீதனமாய் நல்கவேண்டுமா; சீ! சீ! கூடாது, கூடாது! 'கொற்றங்கொள் கணவா, நீ செற்ற பகைவனைக் கொல்லாது பொறுத்தருள்வாய்" என்று வேண்டுதற்குத் தக்கவனை என்மகள் மணப்பதின்றியே, "வெற்றிகண்ட செறுந, என் கொழுநனைச் சமித்துப் பேதையேன்கழுத்து மங்கலத்தைப் பிச்சைதா' வென இரப்பதற்கோ கந்தனிற்கவள் பெண்டாகவேண்டும்!" என வெறுப்புற்றுத் தன் பாயலுட் புகுந்துறங்கினர். பொழுதுவிடிந்தது. பூதாரன் வந்தான். கருணாகார் துயில்நீத் தெழுந்ததும் பூதாரன் அவரைத் தன்மனைக்கு வந்து வைகுமாறு வேண்டினன். இதற்கிசைந்த கருணாகார் பூதாரனைப் பின் தொடர்ந்து சென்று அவன் வீட்டின்கண் தங்குபவராயினார்.

பத்துப் பதினைந்து நாட்கள் கழிந்தன. காந்தியிடமிருந்தேனும் கலாநாதனிடத்திருந்தேனும் எவ்வகை வதந்தியும் வாராதுபற்றிக் கவலையுற்றார். ஆகையால் தான் மறுபடி இரத்தினபுரிக்குப் போக நினைத்திருப்பதைப் பூதாரனுக்குத் தெரிவிக்க அவன், விஜயதசமி வரையிலும் கருணாகார் பெருங்குன்றத்தை விட்டகலப்படாதென்று மகேந்திரன் ஆணைதந்துளதாகச் செப்பினான். இதைக்கேட்கக் கருணாகார் சற்றுத் திகைப்புற்றனரெனினும் அவ்வாணையின் பொருள் அவருக்கு உடனே விளங்கி விட்டது. தன்னிடம் அவன் சொல்லிய இரகசியத்தைக் காக்கவே இச்சூழ்ச்சி செய்யப்பட்டிருந்ததென் றுணர்ந்தார்.

இன்னுஞ் சிலநாள் இவ்வாறு அகல ஒருநாள் மாலைப் பொழுதில் கருணாகார் அம்மலையின்கண் மாஞ் செடியடர்ந்த வொரு வனத்தினூடு உலவி வருகையில் இரு பெரு வேட்டை நாய்கள் துரத்தப் பெண்மானொன்று அவருக் கெதிரே ஓடிவந்தது. எதிர்வருமிவரைக் கண்டு மருண்ட அம்மான் திகைப்பினால் சிறிது தாழவே தொடர்ந்துவந்த நாய்களும் காலையொன்று கழுத்தையொன்றாய்க் கவ்விக் கொண்டன. இதற்கிடையே அங்கு, வேடுவர் ஊதும் காளத்தினொலி எழ, அவ்வொலியைத் தொடர்ந்து குதிரையிற் சிலர் வருவதுணர்ந்த கருணாகார் அருகிருந்த வோர் புதரில் ஒளிந்து கொண்டார். இராகவன் மரபில் அவர் வந்தவரல்லரோ.

குதிரைமீது வந்தவர் மகேந்திரனும் அவனுக்கு முடி எடுத்துச் சூட்டிய தினகரனும் ஆவர். தினகரன் அரண்மனையைச் சேர்ந்த வேடுவர்க்குத் தலைவன். விரிந்தகன்ற அவன் மார்பில் வீரத்திரு குடிதங்கி வாழ்ந்தனள். யானையின் துதிக்கைபோன்று திரண்டு நீண்ட அவனது கைகள் காத்தற்குரியன. அருளுடன் கூடியஆற்றலே அவனிரு கண்களிலும் விளங்கும். இவன் தனது அரசர்பால் அன்பிற் சிறந்தவன். பண்டைநாள், வஜ்ரதரன் காலமாருதனால் தோல்வியுற்றபோது, கருக்கொண்ட நிலையில் கோட்டையி லிருந்து தப்பியோடிய அரசிக்குத் துணையாய்ச் சென்று, கொன்றையின் நிழலிற் பிறந்த மகவை மான்பாலூட்டி வளர்த்தது இந்தத் தினகரனாதலால், இவனுக்கும் மகேந்திரனுக்கும், தந்தைக்கும் மகனுக்கும் உரிய அன்பு நிலவியிருத்தல் இயற்கையே.

வந்தவரிருவரும் புரவிவிட்டிறங்கினர். தினகரன் நாய்வாய் தவிக்கும் மான்பிணையைப் பிடித்து மகேந்திரன் முன் கொண்டுபோய், அவனுக்கு ஒரு கத்தியையும் நீட்டி, "மகேந்திரா, விஜயதசமி வருவதற்குள் கொலைத்தொழில் பழக விரும்பினாய் எனின், இவ்விலங்கினைக் கொன்று பார்," என்றனன்.

"வேண்டா, என்னைப் பாலூட்டி வளர்த்த தாயின் இனத்தைக் கொல்ல வேண்டா," வென மகேந்திரன் தினகரனது கைகளைப் பிடித்துக் கொண்டு வேண்டினான்.

இதுகேட்ட தினகரன் அவ்விளைஞனைச் சற்று உற்று நோக்கிப் பிறகு கத்தியை உருவி அம்மானின் கழுத்தைப் போழ்பவனாய், "மைந்தா, மகேந்திரன் தன் சரித்திரத்தினுள் மானைச் சேர்த்துப் பிதற்றுவது எவன் காதிலேனும் பட்டிருக்கு மானால், அவனுக்கும் இதுவேகதி," என உறுமினன்.

ஒளித்திருந்த உடல் கருணாகார்க்கு நடுங்கிற்று. அவர் முன் மறைவிடம்புக்கதற்குக் காரணம் இல்லை யென்றால், தினகரன் உரைத்த இவ்வார்த்தைகளுக்குப்பின் எதிர்வரின் பின்பிழைப்பதற்கும் இல்லை.

"அதனைமுற்றிலும் மறைத்துவைக்க முடியாது. தினகா, தந்தாய், எல்லாம் விரைவில் வெளியாய் விடும்" எனப் பெருமூச் செறிந்தனன் மகேந்திரன்.

"எதனை மறைத்துவைக்க இயலாது? எது வெல்லாம் விரைவில் வெளியாய்விடும்?" என்று தினகரன் வியந்து கேட்டான்.

இச்சமயம் கருணாகார் புக்கிருந்த புதர் குலுங்கியதற்குக் காரணம் காற்றன்று. "எல்லாம், எனக்கு முன்னுரைத்தவப் பாழ்படு இரகசியமாகத்தான் இருக்கவேண்டும். அந்த இழவை இந்த அரக்கனிடம் சொல்லிவைப்பானேன். இவன் போய் யாரிடமாவது விளம்பி வெளியாக நான்தான் வெளியாக்கினேனென்று என் தலைக்

கல்லவோ நீங்குவரும்” என நினைத்து அவர் மெய் பதறினர்.

மகேந்திரன் தினகரனது காதருகுற்று வார்த்தை யொன்று சொல்லி அவன் மார்பின்மீது சாய்ந்தான். தினகரனே அவனை எழுப்பி நிறுத்திச் “சீ! சீ! நானி தனை யொரு நாளும் நம்பமாட்டேன். நினக்குத் தகா தன, நின் மரபிற்குத் தகாதன, நின்னை ஈன்ற தாய்க் குத் தகாதன, நான் வளர்த்த சேய்க்குத் தகாதன, மொழிந்தனை. நின் இளமையைக் கெடுத்த சாலியனிற்கே தகும் இச் சொற்கள். பைத்தியமே, வா, போவோம். யாவரோ நினக்குச் சூனியம் வைத்திருப்பது! கண் ணெச்சில் கழிப்போம், வா. நின் கை வாளைக் கங்கைநீர் தெளித்து மந்திரிப்போம், வா, வாவா, குழந்தாய், நீ குடித்து வளர்ந்தது மானின் பாலேயாயினும், மருட்சி தீர்க்கின்றேன், வா” என்று தேற்றி, அவனைக் குதிரை மீதேறச் சொன்னான்.

“தந்தாய், கேள். என் மருட்கை மாறுதற்கு உபாயம் ஒன்றே உளது. அதையும் தேடினேன். ஆனால், என் விதியாய் நின்று ஒரு பாதகன் அதை மறுத்தான். பிறி தொரு மருந்தில்லை, மந்திர மும்இல்லை......ஆதலால்....”

“மகேந்திரா, நானுமென் திண்புயத் தனைய ரெண் மரும் சூழ்ந்துநின் றுன்னைப் போரிற் காத்தால், பகை வனின் கைக்கு நீ எட்டுதற் கூடுமோ!”

“ஆயினும், ஐய, இப்போரில் நான் கலவாமலே விலக வழிதான் ஒன்று இல்லையோ?” என்று மகேந்தி ரன் இரங்கினன்.

தினகரன் சற்று யோசித்து, “ஆம், ஒன்றுளது. வஜ் ரதர வகுப்பில் போரில் கலக்க வேண்டியவர்களுள் மிக்க இளையவன் வயதில் நீயே. காலமாருதரிற் சிறிய வன் மாணன் என்பான். அவனது தந்தை என் தந்தை யைக் கொன்றுளன். எம் மிருவர்க்கும் இரத்தப்பழி தொடர்ந்து வருகின்றது. அதனைத் தீர்த்துக்கொள்ள விஜயதசமி நாளையே நோக்கி யிருந்தேன். எம்மிருவர் இரத்தத்தை ஒரு பாத்திரத்திற் பெய்து குலுக்கினாலும் கலவாது. ஆயினும், விதியின் விளையாட்டைப்பார். அவ னென்றொரு புத்திரி, சுமித்ரையிடம் காதல் கொண்டு ளன். இவள் மனமும் அவன்பால் நாடுகின்றது. ஈதறிந்த வென் மனநிலை என்னும் எண்ணுதி. கடுங்காவலால் அவர்க்கிடையே இக்காலம் களவொழுக்கம் நிகழாமற் காக்கப்பட்டிருக்கின்றது. கண்ணைச் சிறிது கொட்டு வேனாயின், மாணன் என் மகளோ டோடி விடுவான், பிறகு......”

“ஓகோ! உணர்ந்தேன். மாணன் போரினிடையே காணாவிட்டால், அவனுக் கிளையாய நான் எம் வகுப்பில் நின்று விடலா மல்லவா!” என்று கேட்ட மகேந்திர னின் முகம் கிளர்ச்சி யுற்றது.

“தலைவா, கேள். நானுன்மாட்டுப் பூண்டுள அன் பின் அளவைக்காண். பிறர் உனக்குத் தமதுயிரைத் தந் திடலாம். —என் மனையின் மானத்தையும், பழியின் நினைவையும் உனக்காக அர்ப்பணம் செய்கின்றேன், நான்”

“ஆருயிர்த்தந்தாய், அன்பின் பெருந்தாயே; நின் மானப்பழிக்குப் பழுது செய்யும் புன்மனக் கோழை யேன் என் செய்வேன்' என மகேந்திரன் ஏங்கினன்.

“மைந்தா, குரலெடுத்துக் கூவாதே. இவ்வனத்திற் புதரிற்கும் காதுளது, வா போவோம்,” என்று கூறி யாவரையும் உடனழைத்துத் தினகரன் போயினன்.

இதுவரையில் உறைந்திருந்த உயிர்ப்பும், கருணாக ரிற்கு இப்பொழுதுதான் இளகிவந்தது. எழுந்திருந்து நாற்றிசையும் பார்த்துவிட்டுப் பிறகு, “இதுவும் நல்ல உபாயமே. வனசரன் காட்டும் வாஞ்சை வளநகரிற் காண்பதரிது. போர் நடந்தபிறகு கந்தனிற்குக் காந் தியை அளிப்பதாகக் கூறிவிட்டா லென்னவென்று ஒரு போது எண்ணினேனே. அப்படிச் சொல்லி யிருப்பே னானால் இப்பொழுது நடத்தியே தீரவேண்டி வந்திருக்கு மல்லவா......அப்புறம் கலாநாதன்...” என்று இன்ன வாறு எண்ணிக் கொண்டே பூதாரனது மனை நோக்கி நடக்கலாயினர்.

T. N. சேஷாசலம்.

சேக்கிழாரும் திருக் கண்ணப்பரும்.

பொருள் ஆராய்ச்சி.

அன்பு ஆராய்ச்சி.

[448-ம் பக்கத் தொடர்ச்சி]

அன்பே அருந்தமிழ்.

இவ்வளவும் எடுத்துரைத்தமையால் இவ்வன்பு என் னும் சொல் வேறெந்நாட்டு மொழிகளிலும் மொழி பெயர்க்கலாகாது என்பது இனிது விளங்கும். அன்பு நிலையில் உள்ள அமைதியைநோக்கி அதனை நடுநிலை என்று மயங்கலாம். நடுவுநிலை-சமநிலை. சாந்தர் என்று கூறுமிடத்தில் வேண்டுதல் வேண்டாமையில்லை; அமை தியே பொலிந்து தோன்றுகின்றது, பரபரப்பு என்ப தில்லை. துடுக்கும் இல்லை மிடுக்கும் இல்லை. அன்பு பழுத்த இடத்தும் வேண்டுதல் வேண்டாமை இல்லை. ஒருவர் ஒருவராக ஆய்விட்ட நிலையில் ஒருவர் ஒருவரை வேண்டுவதென்ப தேது? நினைப்பும் இல்லை மறப்பும் இல்லை. அல்லாக்கால்

> உள்ளினேன் என்றேன்மற் றென்மறந்தீர் என்
> புல்லாள் புலத்தக் கனள். [றென்னைப்

என்று ஊடி நிற்கவேண்டுவதுதான். அமைதியே அன்பு நிலையில் ஒளிர்கின்றது. ஆனால் நடுவுநிலையில் இருவர் இல்லை. அன்போ இருவரைப் பற்றித்தான் எழுகின் றது. க்ஷமை அல்லது பொறை என்பது, எளியோர் பிழை செய்யினும் பொறுத்துக்கொண்டு அவர்களது கீழ்மைக் கிரங்குதலாகும்.

> தம்மை இகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற் (று)
> எம்மை இகழ்ந்த வினைப்பயத்தால்—உம்மை
> எரிவாய் நிரயத்து வீழ்வார்கொல் என்று
> பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

இஃது பொறை என்பதற்குத் தமிழர் கூறியதோர் புதிய பொருள். இங்குப் பொறுப்பாரும் பொறுக்கப் படுவாரு மாக இருவர் இருப்பினும், இருவர்க்கும் ஒரு தொடர்பு மில்லை. அதோடு இவை யெல்லாம் மேல்கீழ் என்ற வேற் றுமையுள்ள இடமாகும். அன்புநிலை அது ஆகாது. அவா

வினைப் பற்றி முன்னரே கூறினோம். மைத்ரி அல்லது அருள் என்பது எல்லோரிடத்தும் இன்சொல் பேசி நகைமுகங்கொண்டு வாழ்தலாகும். இஃது திருவள் ளுவர் கூறிய அன்புநெறியின் முதற்படியாகிய இனி யவை கூறலில் அடங்கிவிடும் இதற்கும் மேல் சென் றால் அல்லவா அன்பைக் காணலாம். தாக்ஷண்யம் அல் லது கண்ணோட்டமாவது, தம்மொடுபழகியவர் கூறு வதை மறுக்க மாட்டாது பழமை பாராட்டுங்குணம். அன்பிற்கும் இதற்கும் எத்தனையோ தூரம். கருணை அல்லது அழுகை (அல்லது அருள்), பிறரது துன் பம் கண்டு இரங்குதலாகும். குழந்தை ‘பூச்சுக்காரன் விழுங்கி விடுவான்” என அச்சுறுத்தப்பட்டபோது அழுவதுகண்டு அச்சமுறுத்திய நாமே இரங்குகின்றோம். அன்பு நிலையில்போல நாமும் பூச்சுக்காரனுக்கு அஞ்சி அழுவதில்லை. இடிஇடிப்பது கேட்டுத் திடுக்கிட்டு அலறி எழுந்து அழுகின்றது குழந்தை. ஒரு கேடும் வரப் போவதில்லை என்றறிந்துள்ள நாம் அவ்வாறு திடுக்கிட்டு அலறி அழப்போவதில்லை. ஆனால் பச்சைப் பசுங்குழவி அஞ்சி அலறுவதற்கு மனமுருகி இரக்கங் கொள்கிறோம். ஆகவே ஈதும் அன்பல்ல. ஸ்நேகம் அல்லது நண்பு என்ற இடத்தில் இருவர் இணைக்கப்படுகின்றனர். எவ்வாறு புன லானது மண்ணாங்கட்டி இரண்டினையும் கரைத்து ஒன்று கத் திரட்டிச் சேர்க்கின்றதோ அவ்வாறே தொலைவில் தூரஇருந்த இருவரை நெருங்கவிடுகின்றது நட்பு: ஒரு வரிடத்தில் ஒருவரை நட்டு வளரச் செய்கின்றது; மா மும் நிலமும் போல ஒன்றுகின்றனர். பற்றுசு வைத்துப் பற்றவைத்தபோது பொற்கட்டி இரண்டும் ஒட்டிக் கொள்வதுபோல இரண்டுபேரும் ஒருவர்க் கொருவர் துணையாகின்றனர்.

> உடுக்கை இழந்தவன் கைபோல வாங்கே
> இடுக்கண் களைவதாம் நட்பு.

ஒருவகையில் நோக்குமிடத்து இத்தகைய பயன் அன்பு நிலையில் எய்தலாவது இல்லை எனலாம். ஒரு வர்க்கு நோய் வந்த விடத்து மற்றொருவர்க்கும் அதே நோய் வருமானால் ஒருவர் ஒருவர்க்கு உதவுவது எங்ஙனம்? நண்பினர் உதவுவதுபோன்று வேறாக நின்று உதவுவது இல்லை என்றோமே யன்றி அன்பர்கள் ஒருவர்க் கொருவர் உதவிக் கொள்வதே இல்லை என்று நாம் சொல்ல வரவில்லை. அன்பு நிலையில் இரண்டென்ற வழக்கில்லாமையால் உத வுவது என்ற பேச்சுக்கிடமில்லை. அன்பர்கள் உயிரும் உடலும் போலும் ஒன்றித்து நிற்கின்றனர். இன்னும் பூவும் மணமும் போல ஒன்றாய்ப் பொலிந்து தோன்று கின்றனர்.

வாத்ஸல்யம் அல்லது காதல் என்ப தொன்றுண்டு. அது மேல் சொல்லிவந்தவற்றிற் கெல்லாம் முன் சென்று தலையணியில விளங்குகின்றது. முதல் முதல் கன்று போட்ட பசு தன் கன்றினி டத்து வைத்திருக்கும் பற்றினைத்தான் வாத்ஸல்யம் என்று வழங்குவது. கன்றின் மேலுள்ள அழுக்கினை எல்லாம் அழுக்கென்றும் பாராது அதன்மேல் வைத்த ஆர்வத்தினாலே நக்கி நக்கி இன்புறுகின்றது. பசு வைவிட அஞ்சி அடங்கும் உயிர் உலகில் வேறொன்றும் இல்லை. ஆனால் அந்தப் பசுவே தன் கன்றினுக்கு இடை யூறு வந்தபோது புலிபோல் பாய்ந்து புலியையும் கொம் பால் முட்டிக் கிழித்தெறிகின்றது. அதன் எண்ண மெல்லாம் கன்றின்மேல்தான். அன்பினைப் புகழ்வார் வாத்ஸல்யத்தினையே உவமையாகக் கொள்வர்.

“கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே” என்றார் அன்பே உருவாய் விளங்கி அன்பு வாழ்க்கை வாழ்ந்து அன்பினைத் துய்த்து அன்பினை விரித்துரைத்த ஆளுடைய அடிகள். ஆனால் இந்த வாத்ஸல்யமும் அன் பாகாது. கன்று பெரிதாகும் வரையில்தான் இவ்வாத் ஸல்யம் கொழுந்துவிட் டெரிகிறது. சிறிது சிறிதாக மழுங்கிப் பின் சில நாள் செல்லச் செல்ல அடியோடு அவிந்துபோகின்றது. எடுப்பார் பிடிப்பார் இல்லாது கிடக்கும் இளம் விலங்குகள் காடுகளில் வாழ்ந்து வளர்தற்காக இயற்கைஅன்னை ஏற்படுத்தியதொரு காவலே வாத்ஸல்யம் எனும் காதல். அஃதில்லை யாயின் கொடிய விலங்குகளால் கொல்லப்பட்டு அவ்வினமே உலகில் இல்லாமல் போய்விடும். இயற் கையில் அமைந்த இந்தக் காவல் எத்தனை நாள் உடன்வர வேண்டுமோ அத்தனை நாள்தான் கூடவே வரும். அதற்குமேல் ஓரடியும் முன்னெடுத்து வைப்பதில்லை. ஓரிமையும் உடன் வருவதில்லை. கன்று பெரிதானவுடன் அது தாயைவிட வன்மை மிகுதிபெற் றுத் தன்னைத் தானே காத்துக்கொள்கின்றது. அப் போது அக்காதலும் ஆவியாய்ப் பறந்தோடுகின்றது மற்றொரு கன்றினை ஈன்றதும் பழைய கன்றினைக் கண் ணில் காண ஒட்டாதபடி வெருட்டித் துரத்துகின்றது. ஆகவே வாத்ஸல்யம் ஒருவகையில் விலங்கினத்திற்கு உரி யது. விலங்கினைப் போன்ற மாக்களுக்கு உரியது. இயற்கையில் அமைந்து கிடக்கும் அரியதோர் காவல். சிலநாள் நிலைப்பது. அன்போ மக்களில் சிறந்த அந்தணர்களுக்கு உரியது. அறிவிலே வளர்வது; என் றும் நிலைப்பது.

இனி மேற்கூறியவை எல்லாம் துன்பத்திற்கு இடனா குவன. ஆனால் அன்பிலேயோ இன்பந்தான் உண்டு. சாவிற் சாதலும் நோவினோதலும் இன்பமாகியே முடி கின்றன. நெருப்பில் அகப்பட்ட குழந்தையைக் காப்பாற் றச் சென்று பற்றி எரிந்த தாயானவள் குழந்தையைக் காப்பாற்றியதும் இன்பக்கடலில் மூழுகுகின்றாள். நோவின் நோதலிலும் ஓர் ஆறுதல் இருக்கின்றது. அவாவிற்கும் அன்பிற்குமுள்ள மற்றொரு வேற்றுமை இதுவாகும். தினவு எடுத்தவன் செங்குருதி பீறிட்டு வரச் சொரிந்தாலும் அஃது இன்பமாவதுபோல, அன்பு நிலையில் துன்பமும் இன்பமாகின்றது. இவ்வன்பு பாவிப் பாவிப் பாரை மூடிக்கொள்ளவேண்டுமென்றால் அவரவர் களது துயரம் எல்லாம் நம்தலையில் வந்து விடியாதா? விடியாதென்கின்றனர் அன்பினை ஆராய்வோர். உலக முழுதிலும் அன்பு பரவுமானால் இவனுக்கு மெய்யுணர் வும் கைவரப்பெறும், ஆதலால் உலகின் உண்மை இயல்பை அறிவான். தோற்றமாம் துன்பம் இவனைத் தொடருவதில்லை. பிறர் நிலையை உணர்கின்றான், அந் நிலையைத் தானும் அடைகின்றான். அதனைநீக்க வழியை அறிகின்றான். இவன் உலகில் தோய்ந்தவன் அல் லன். தாமரையிலையில் நீர்போலப் பட்டதும் படாதது மாக இருக்கின்றான். ஆதலால் இவன் துன்பம் உறுவ தில்லை. சிறு தீயினைத் தண்ணீர் அவித்து விடுகின்றது. ஆனால் பெருந்தீயானது பற்றி எரிகையில் சிறிதுநீர் தெளித்தால் குப்பென்று ஓங்கி எழுந்து கொழுந்து விட் டெரிகின்றது. நீரும் நெய்யாய் விளக் கெரிக்கின்றது. அதுபோலவே சிற்றின்பத்தில் மூழ்கிச் சிற்றன் பினை உடைய நமக்குத் துன்பம் வரின் இன் பம் இல்லை யாகவே அல்லலுறுகின்றோம். பேரன்போடு பேரின்பம் வரவரத் துன்பங்கள் எல்லாம் இன்பம் எனும் ஒளிப் பிழம்பிற்கு எரிகரும்பாய் இன்பத்தை வளர்க்கின்றன. இதனாலன்றே நச்சினார்க்கினியரும் “இன்பமே அன்றித் துன்பமும் அகத்தே நிகழுமால் எனின் அதுவுங் காமம் கண்ணிற்றேல் இன்பத்துள் அடங்கும்” என்று கூறியுள்ளார்.

ஆகவே அன்பென்பது காதல், கண்ணோட்டம், அளி, ஆர்வம், இரக்கம், இளிவு, அழுகை, அருள், நட்பு, நகை, ஒற்றுமைக்காட்சி, நடுநிலை, மகிழ்ச்சி என்பனவற்றிற்கு எல்லாம் வேறாகி, இவற்றின் உயர்வெல்லாம் ஒருசேரப் பிழிந்ததொரு இன்சுவைப் பொருளாம். இவற்றின் பேரொளி எல்லாம் ஒன்று சேர்த்துத் தீற்றியதொரு அழகிய படமாம். அதனாலன்றோ பெருந்தமிழராகிய கம்பர்,

"முன்பு பின்பின்றி மூவுல கத்தினும்
அன்பி னல்லதோர் ஆக்கமுண் டாகுமோ"

என்று கூறினர்."

இரக்கம் முதலியவற்றினும் அன்பு வேறுதலின் அதனைத் தலையன்பு இடையன்பு கடையன்பு என்று பிரிப்பது யாங்கூறிய பேரன்பிற்கு ஏலாது. உலகில் வழங்கிவரும் சிற்றன்பையே அங்ஙனம் பிரித்தார்கள் பெரியோர்கள். அல்லாக்கால் எல்லையற்றுக் கிடப்பதற்கு எல்லை இடுவார் யார்? அன்பு என்பதற்குத் திருமூலர் சொல்லியபடி சிவன் என்று பொருள் கொள்வதுதான் தக்கது. குறுகிய பொருள் கொண்டு சிற்றன்பினையும் அன்பென வழங்கி இவ்வாறு பிரித்தார்கள். மேற்காட்டிய பிரிவினைப்பற்றி நாவலர்பெருமான் கீழ்வருமாறு எழுதியுள்ளார்.

"நாயகி நாயகனது பெயர் கேட்டவுடன் வசமழிதல் தலையன்பும், அவனைக் கண்டவுடன் வசமழிதல் இடையன்பும், அவனைக் கூடினவுடன் வசமழிதல் கடையன்புமாம். அவ்வாறே பக்குவான்மா சிவனது பெயர் கேட்டவுடன் வசமழிதல் தலையன்பும், அவரைக் கண்டவுடன் வசமழிதல் இடையன்பும், அவரைக் கூடினவுடன் வசமழிதல் கடையன்புமாம். நாயகனது பெயர் கேட்டவுடன் வசமழியும் தலையன்பையுடைய நாயகிக்கு அக்கேட்டலோடு காண்டல் கூடல்களும் நிகழ்ந்தவழி முறுகி வளரும் அன்பின் பெருக்கம் இத்துணைத்தென்று கூறுதல் கூடாதன்றோ!"

அவ்வாறே தாயானவள் தனது குழந்தையின் நிலையைக் கேட்டதும் பால் சுரப்பது தலையன்பாம். அதனது முகங்கண்டு சுரப்பது இடையன்பாம்; அழுது புலம்புவது கண்டு சுரப்பது கடையன்பாம். அப்பொழுதும் பால்சுரப்பதில்லையானால் அவள் தாயே அல்லள் எனலாம். இதனை உள்ளத்தடக்கிச் சிவப்பிரகாசர் ஆளுடைய பிள்ளையாரைப் பற்றி அழகியதோர் பாடல் பாடியுள்ளார். பிள்ளையார் சைவப் பழமாயினும், பால்மண மாறாப் பச்சைப் பசுங்குழந்தை என்று பிறர் சொல்லக் கேட்ட உடனேயே தலையன்புடையார்போலப் பால் சுரந்த பாண்டி காட்டுக்கோப்பெருந்திருவாளையும் பொய்கைக்கரையிலே பிள்ளையார் அழுது புலம்புவது கண்டு கடையன்புடையார்போலப் பாலூட்டிய உலகப் பெருந்தாயையும் ஒன்றுவைத்துப் பாடி இவர்களில் சிறந்தார் யார் எனப் பிள்ளையாரை வினவுகின்றார்,

இலைபடர்ந்த பொய்கை இடத்தழுதல் கண்டு
முலைசுரந்த அன்னையோ முன்னின்-நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தஅருள் கோமகளோ சம்பந்தா
இங்குயர்ந்தார் யார்சொல் எனக்கு.

இனி மற்றொருவகையால் இப்பிரிவினை விளக்கலாம். காதலன் இறந்தனன் என்றதும் உடனே உயிர்துறப்பது தலையன்பாகும். பிரிவாற்றாமையினால் நெருப்பில் விழுந்து உயிரை மாய்த்துக்கொள்வது இடையன்பாகும். பிரிவாற்றாமையாலே இன்பத்தை வெறுத்துக் கைம்மை நோன்பு நோற்று உடலை யுருக்கிக்கொள்வது கடையன்பாகும். நெடுஞ்செழியன் மனைவியும் சூரன் மனைவி பதுமகோமளையும் தலையன்புடையவர்கள்.

காவன் மன்னவன் இறந்தனன் எனும்உரை கன்னத்துள்
மேவும் எல்லையில் அசனி ஏறுண்ட வம்பணியேபோல்
தேவி ஆகிய பதுமகோமளை எனும் திருமங்கை
ஆவிநீங்கினள் தலையளி ஆகியது அதுவன்றோ?

தலையன்பு என்பதினும் தலையளி என்பது பொருத்தமாம் எனக் கச்சியப்பர் கூறியது காண்க. கோவலனைக் கொன்றது பெரும்பிழை என்று உணர்ந்ததும் நெடுஞ்செழியன் மயங்கிவீழ்ந்தான். அவன் மனைவியும் தன் மணாளன் அரசர்க்கு உயிர்நிலையாகிய அறநெறி பிழைத்தான் என உணர்ந்து ஆவிதுறந்தாள்,

அரிமான் ஏந்திய அமளிமிசை இருந்த
திருவீழ் மார்பின் தென்னர் கோமான்
தயங்கிணர்க் கோதை தன்துயர் பொறாஅன்
மயங்கினன் கோல்என மலரடி வருடித்
தலைத்தாள் நெடுமொழி தன்செவி கேளான்
கலக்கங் கொள்ளாள் கடுந்துயர் பெறாஅள்
மன்னவன் செல்வுழிச் செல்கயா னெனத்
தன்னுயிர் கொண்டவன் உயிர்தே டினள்போல்
பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்

என்று அடியார்க்குநல்லார் கூறுவர். இந்தத் தலையளி, இடையளி கடையளி என்ற பிரிவினை உட்கொண்டே கீழ்வரும் 'மணிமேகலை' அடிகள் எழுந்தன போலும்.

காதலர் இறப்பின் கனைஎரி பொத்தி
ஊதுலைக் குருகின் உயிர்த்து அகத்து அடங்காது
இன்னுயிர் ஈவர் (1) ஈயார் ஆயின்
நன்னீர்ப் பொய்கையின் நளிஎரி புகுவர் (2)
நளிஎரி புகாஅர் ஆயின் அன்பரோடு
உடன்உறை வாழ்க்கைக்கு நோற்று உடம்படுவர் (3)

இவ்வடிகள் முறையே தலையன்பு இடையன்பு கடையன்பு என்றவற்றைக் குறித்தல் காண்க. அன்பு நிலையில் சாவிற் சாதலே உண்டென்றோம். ஆகவே இப்பிரிவினை எல்லாம் அன்பின் பிரிவினை ஆகா என்பது வெள்ளிடை மலையாம். தலையன் பொன்றுதான் அன்பு எனப்படும். மற்றையன அன்பாகா?

அங்ஙனமே பேரன்பினை மந்ததரம் மந்தம் தீவிரம் தீவிரதரம் என்று பிரிப்பதும் ஒருசிறிதும் ஒவ்வாது. இப் பிரிவுதான் என்னை? ஆறுமுகநாவலர் அதைப்பற்றி அருமையாக எழுதியது இதுவேயாம்.

"பத்தியானது மந்ததரம் மந்தம், தீவிரம், தீவிரதரம் என நால்வகைப்படும். அரக்கானது வெய்யிலின் முன் இருந்து வெதும்புதல் போல்வது மந்ததரபத்தி. மெழுகானது வெய்யிலுக்கு எதிர்ப்படின் உருகுதல் போல்வது மந்தபத்தி. நெய்யானது சூட்டுக்கு இளகுதல் போல்வது தீவிரபத்தி. தைல தாரையானது சிறிதும் இடையறாது ஒழுகுதல் போல்வது தீவிரதர பத்தி." மனமானது சிலருக்கு எப்போதும் நீர்போல நெகிழ்ந்து அன்பாய் ஒழுகுகின்றது. சிலருக்கு நெய் போலக் குழம்பி இருக்கின்றது. யார்க்கேனும் சிறிதளவு நோய் வந்தால் அவர்கள் மனம் பதைபதைக்கின்றது. மற்றும் சிலர்க்கோ மெழுகுபோல இளகலாய் இருக்கின்றது. பிறர்க்குத் துன்பம் வந்தபோது இரக்கங் கொண்டு ஏதேனும் உதவி செய்கின்றனர். இன்னும் சிலருக்கோ மனம் அரக்குப்போல வலிதாக இருக்கின்றது. இடி தலைமேல் விழுவதுபோலத் தலைபோகும் துயரம்வந்தால் தான் அவர்கள் மனம் ஐயோ என்னும். நாம் முற்கூறி வந்த பேரன்பு உள்ள இடத்தில் தீவிரதர அன்பு ஒன்று தான் உண்டு. நெருப்பினின்றும் எடுத்ததும் நெய்யும்

மெழுகும் அரக்கும் கட்டிப்போகின்றன. ஆனால் அன்பு நிலையில் அரக்கும் மெழுக்கும் நெய்யும் கல்லும் இல்லை. நீரோடு நீர்கலந்தாற்போலக் கலக்கும் அன்பு நிலையை மிக அழகாகப் பாடுகின்றார் புகழேந்தியார்:—

ஒருவ ருடவி லொருவர் ஒதுங்கி
இருவ ரெனுந்தோற்ற மின்றிப்—பொருவெங்
கனற்கேயும் வேலானும் காரிகையுஞ் சேர்ந்தார்
புனற்கே புனல்கலந்தாற் போன்று.

இவ்வளவும் கூறியதால் அன்பென்பது இரக்கம் முதலாக எடுத்துச் சொல்லியவற்றினும் வேறாகி உயர்ந்து விளங்குவது என்பது புலனாகும்.

அன்பென்பதற்கு யாம்கொண்டவாறே பழந்தமிழர்கள் பொருள் கொண்டனர் என்பதனை வற்புறுத்த அவர்கள் விரித்துரைத்த ஐந்திணை ஒழுக்கத்தில் காணக் கிடக்கும் ஒருசிறு குறிப்பினை இங்கு எடுத்துக் காட்டினால் போதுமென நினைக்கின்றோம். காதலனும் காதலியும் இருண்டடர்ந்த பொழிலகத்தே தன்னந் தனியாகக் கண்டு அன்பின்வாய்ப்பட்டு ஒருள்ளத்தனர் ஆகின்றனர். அன்றுமுதல் ஒருநாள் போலப் பலநாளும் இவ்விருவரும் போந்து ஒன்றுகூடி இன்புற்று வாழ்கின்றனர். அவளது உயிர்த்தோழி இவளது மாறுபாடுகளை உற்றுநோக்குகின்றாள். என்றுமில்லாத பெருமகிழ்ச்சியில் பெண்ணரசி மூழ்குவதைக் காண்கின்றாள். தன்னந்தனியே இருக்க விரும்புவதை உணர்கின்றாள். தனிவழியே போவதை அறிகின்றாள். உடல் மாறுபாட்டையும் நடை வேறுபாட்டையும் பார்க்கின்றாள். அவள் முற்றிலும் மாறிவிட்டாள் என்பது எல்லாம் தோன்றுகிறது. மறைத்துப்பேசுகிறதும் தெரிகிறது. அந்தப்புறமும் இந்தப் புறமும் யாரையோ எதிர்பார்ப்பதுபோல நிற்பதும் வெளியாகிறது. அங்கொரு ஆடவன் வந்து போவதையும் அவனை நோக்கமாக அவள் இருப்பதையும் குறிப்பால் உணர்ந்துகொள்கிறாள். அவனைப் பொறுத்தது இவளைப் பொறுத்த தல்லவா? ஆகவே உண்மையை உணரவேண்டாமா? எட்டியும் சுட்டியும் காட்டாத குடியில் பிறந்தபெண்ணை நேரேபோய் "அவனுக்கும் உனக்கும் என்ன தொடர்பு" என்று கேட்கலாமா? விளையாதுகூட அக்கேள்வி தன்காதில் விழுந்ததும் மனம் புழுங்குவாளே. எனவே வேறோர் வகையால் உய்த்துணர வேண்டி முயல்கின்றாள். இந்த இடத்தில் நாண நாட்டம் நடுங்கநாட்டம் என்ற இரண்டு கோவைத் துறைகளைத் தமிழர் அழகாகக் கூறுவர். குடிபிறந்த பெண்ணுக்குக் கோயிலும் கடவுளும் கொழுநனே யாகும். அவர்கள் மற்றொரு கடவுளைத் தொழுவது கனவிலும் இல்லை. அவ்வாறு கடவுளைக் கருதினாலும் அவர்களது கற்பிற்கே ஓர் குறையுண்டாகும். உண்மையறிய உழல்கின்றவளாகிய தோழி இதை மனதில் வைத்துக் கொண்டு ஒரு சூழ்ச்சி செய்கின்றாள். மூன்றாம் பிறையைக் கண்டு தொழுதால் நன்மை பெருகும் என்பது பழையதோர் கொள்கை. அதற்கிணங்கப் பண்டைக் காலத்தில் இளம் பெண்கள் இளம் பிறையைத் தொழுவதுவழக்கம். அவ்வழக்கத்தையொட்டித் தலைவிக்குப் பிறையினைக் காட்டித் தொழ வேண்டுகிறாள் தோழி. காதலனை விட்டுக் கடவுளேயாயினும் வேறொருவரைத் தொழுவாளா காதலி? ஆகவே ஒன்றும் செய்ய இயலாது நாணித் தலைகுனிந்து செயலற்று நிற்கின்றாள். இதுவே நாண நாட்டம். அப்போதும் தோழியிடம் மறைவாகச்சென்று தலைவி உண்மையை வெளியிடாமல்போனால் மற்றொரு சூழ்ச்சி செய்கின்றாள் தோழி. அதனை நடுங்க நாட்டம் என்பர். திடீரெனத் தலைவியிடம் ஓட்டமாக ஓடி வருகின்றாள் தோழி. "இங்கு ஒருயானை யாரோ ஒருவனைக் குத்திக் கிழித்துச் சிவந்துபோன கொம்பிலிருந்தும் செங்குருதி சொரிந்து கொண்டே ஓடிவரப் பார்த்தேன்" என்கின்றாள். அங்குவந்து அலைபவர் தன் காதலனைத் தவிர வேறுயாரும் இல்லையேஎன எண்ணுகின்றாள் தலைவி. அவன்தான் இவ்வாறு தாக்கப்பட்டானோ என்றும் நடுங்குகிறாள். அப்போது தோழி கொண்ட ஐயம் உறுதிப்படுகிறது. பின் உண்மையும் வெளியாகிறது. இந்தத் துறைகள் இரண்டும் எல்லாக் கோவைகளிலும் உண்டு. ஆனால் அன்பொழுக்கம் ஆய்வோர் இவற்றை ஒப்புவதில்லை. நக்கீரனார் 'இவ்வகை உணர்தல் பொருந்தாது, நாணவும் நடுங்கவும் நாடுதல் அகத்திணை இலக்கணம் அன்று என்க. என்னை.

" நாணவும் நடுங்கவும் நாடாள் தோழி
காணும் காலைத் தலைமகள் தேளத்து"

என்பதாகலான். அல்லதூஉம் இவள் பெரு நாணினளாகலானும் பேரச்சத்தினள் ஆகலானும் இறந்து படுமாகலான் அவளேதத்திற்குக் கவலா ளாயினளுமாம்' என்று உரைத்துப்போவதைக் காண்க. தலைவனைவிட வேறொருவரை எண்ணுவதும் அன்புடையார்க்கு நஞ்சாகும். தொழவேண்டிய நிலையில் அவர்களைக்கொண்டு போய்விட்டால் உயிரையே விட்டு விடுவார்கள். மயிர் நீப்பின் வாழாக் கவரிமா அன்னார் உயிர்நீப்பர் மானம் வரின்.

T. P. மீனாக்ஷிசுந்தரன்.

தமிழ்ப் பாடம் 24.

நள வெண்பா

(451-வது பக்கத் தொடர்ச்சி)

சுயம்வர காண்டம்.

பூணுக் கழகளிக்கும் பொற்றொடியைக் கண்டக்கா
ணுணுக்கு நெஞ்சுடைய நல்வேந்தர்—நீணிலத்து
மற்றேவர் வாராதார் வானவரும் வந்திருந்தார்
பொற்றேர் நளனுருவாய்ப் போந்து 140.

கருத்து:—தமயந்தியை அடையவேண்டு மென்னும் ஆசையால் பூலோகத்து வேந்தர் அனைவரும் வந்திருந்தார். வானவரும் நளனின் உருவமாக உட்கார்ந்திருந்தனர்.

மின்னுந்தார் வீமன்றன் மெய்ம்மரபிற் செம்மைசேர்
கன்னியா ளாகிற் கடிமாலை—யன்னந்தான் [யின்
சொன்னவனைச் சூட்ட வருகென்றாள் சூழ்விதி
மன்னவனைத் தன்மனத்தே வைத்து. 141

பொழிப்புரை:—உண்மை நளன் யாவனெனத் தெரியாத தமயந்தி, விதியின் வினையாகத் தனக்கு நேர்ந்த மன்னவனாகிய நளனைத் தன் மனதிலே தியானம் செய்துகொண்டு, "பிரகாசிக்கின்ற மாலையை யணிந்த வீமராஜனின் மெய்யான குலத்தில் பிறந்த செம்மை

யான கன்னி யான் ஆனல், அன்னம் சொன்னவனுக்கு நான் மணமாலை சூட்டும்விதம் காட்டியருள்வாய்" என்ருன்.

கண்ணிமைத்த லானடிகள் காசினியிற் ரேய்வதால்
வண்ண மலர்மாலை வாடுதலா—லெண்ணி
நறுந்தா மரைவிரும்பு நன்னுதலே யன்ன
ளறிந்தா ளனன்றன்னை யாங்கு. 142.

கருத்து :—தேவர்கள் கண் இமைக்க மாட்டார்கள். அவர் கால் நிலத்திற்படாது. அணிந்த மாலையும் வாடாது. இந்த அடையாளங்களால் நளனது வேஷம்பூண்ட தேவர்களை விலக்கி அன்னம் சொன்ன நிடதநாட்டரசனைத் தமயந்தி அறிந்து கொண்டாள்.

விண்ணரச ரெல்லாரும் வெள்கி மனஞ்சுளிக்கக்
கண்ணகன் ஞாலங் களிகூர—மண்ணரசர்
வன்மாலை தம்மனத்தே சூட வயவேந்தைப்
பொன்மாலை சூட்டினுள் பொன். 143.

பதப்பிரிவு:—விண் அரசர் எல்லாரும் வெள்கி மனம் சுளிக்க கண் அகல் ஞாலம் களிகூர மண் அரசர் வன் மாலை தம் மனத்தே சூட வயம் வேந்தை பொன் மாலை சூட்டினுள் பொன்.

பதவுரை.

பொன் - இலக்குமியைப் போன்ற தமயந்தி,
விண் - தேவலோகத்து
அரசர் - அரசர்கள்
எல்லாரும் - எல்லாரும்
வெள்கி - வெட்கப்பட்டு
மனம் - மனத்திற் குள்ளே
சுளிக்க - கோபிக்கவும்,
கண் - இடம்
அகல் - அகன்ற
ஞாலம் - பூமியிலுள்ளவர்கள்
களிகூர - சந்தோஷ மடையவும்,
மண் - பூமியை ஆள்கின்ற
அரசர் - அரசர்கள்
வன் - கொடிய
மாலை - மயக்கத்தை
தம் - தங்களுடைய
மனத்தே - மனதிலே
சூட - அடைந்து கொள்ளவும்,
வய - வெற்றி பொருந்திய
வேந்தை - நளமகாராஜனுக்கு
பொன் - பொன்னலாகிய
மாலை - சுயம்வர மாலையை
சூட்டினுள் - போட்டாள்.

விரிவுரை :—தமயந்தி நளனிற்கு மாலையிட்ட காரணமாய் உடன்நிகழ்ந்தவற்றை, சுளிக்க களிகூர சூட என்னும் மூன்று வினையெச்சங்களால் கவி குறிக்கின்ருர். தாம் செய்த வஞ்சனையையும் தாண்டி நளனுக்கு அவள் மாலையிட்டதால் தேவர், வெட்கத்தோடு கோபமும் கொண்டனர். ஒருவருக்கொருவர் எல்லாவிதத்திலும் ஏற்றவராய இருவர் மணம்புரியக் கண்ட பூவுலகத்தார் யாவரும் மகிழ்கின்றனர். (ஞாலம் - பூமி. இட ஆகுபெயராய் அதனில் வாழ்கின்ற மக்களைக் குறிக்கின்றது). சுயம்வரத்திற்கு வந்திருந்த மற்ற அரசரோ, ஒவ்வொருவரும் தனக்கன்றி வேறுயாருக்குத் தமயந்தி மாலையிடுவாள், என்று ஏமாந்து இருந்தனர். அப்படியிருக்க அவள் நளனிற்குப்போய் மாலையிடக்கண்டும் அவர்களால் நம்ப இயலவில்லை. "இப்படியும் கேருமா. நளனிருக்க நளனை யும் வரிப்பளோ ஒருத்தி! என ஒவ்வொருவனும் திகைத்தான். காண்பது கனவோ நினைவோவென மருண்டனர். மனம் அவர்க்கு ஒளி யிழந்து இருண்டு போயது. மாலை, என்பது இங்குச் சாயங்காலம். மாலையில் உலகம் எப்படி இருளுமோ அப்படி அவர்மனம் இருளடைந்தது.

அணிகளில் சிலேடை என்பது ஒன்று. ஒரே சொல்லாவது, சிலசொற்கள் சேர்ந்தாவது வேறுவேறு பொருளில் வரும்படி அமைப்பது இந்த அணியின் இலக்ஷணம். புத்தியில்லாதவன், என்பதற்கு அறிவுகெட்டவன் என்றும், புத்தியில் + ஆதவன்=புத்தியிலே சூரியனுக்கு நிகரானவன் என்றும் சிறுபிள்ளைகள் சொல்லி விளையாடுவதும் சிலேடையணியாம். இது, தொடர்ந்த வார்த்தைகளை வேறுவிதமாகப் பிரிப்பதால் சிலேடை தோன்றுவதற்கு உதாரணம். அப்படிக்கின்றி ஒரே மொழியை இரண்டு அர்த்தத்தில் உபயோகப்படுத்தினுலும் சிலேடைதான். "ஏழைகளும் தவசிகளும் ஒருதன்மையர். ஏனெனில் இருவரிடத்திலும் காசு இல்லை." காசு என்ருல் பணம் என்றும் குற்றம் என்றும் இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. ஏழைகளிடத்தில் காசு=பணம் இல்லை. தவசிகளிடத்தில், காசு=குற்றம், இல்லை. ஆகையால் சிலேடையாக இருவரும் ஒரு தன்மையராகின்றனர். இனி ஒருபதத்தை இரண்டுதரம் வேறு வேறு அர்த்தத்தில் உபயோகப்படுத்துவதும் சிலேடையணி. தாடகையை வருணிக்கின்ற கம்பர், அவளுடைய பெரிய உருவத்தைக் காட்டும்பொருட்டுச், "சிலம்புகள் சிலம்பு இடை செறித்த கழல்" உடையவள் என்று கூறுவார். சிலம்பு என்பதற்கு மலை என்றும், காலில் அணிந்து கொள்ளும் நூபுரம் என்றும் இரண்டு அர்த்தங்கள் இருக்கின்றன. பாதசாம் 'கலீர் கலீர்' என்று சப்தம் செய்வதற்காக அதனுள் சிறுசிறு கல்களைப் போட்டு வைப்பதுண்டு. இவள் அணிந்திருந்த சிலம்புகளுக்குள்ளே அந்தச் சிறு கற்களாக மலைகளையே பிடுங்கிப் போட்டிருந்தாளென்ருல், அந்தச் சிலம்பு எத்தனை பெரியதாய் இருக்கவேண்டுமோ. அதை அணிந்த கால்கள் எத்தனை பெரியவோ. அக்கால்களுக் குடையவள் உருவம் எத்தனை பெரியதோ! சிலம்புகள் - மலைகளை, சிலம்பு இடை- நூபுரத்திற்குள்ளே, செறித்த - போட்டிருக்கின்ற. கழல் - கால். இது ஒரு சொல்லை இரண்டு அர்த்தத்தில் உபயோகப்படுத்தியது. சாபம்,என்பதற்குப் பெரியோர் இட்ட சாபம் என்றும், வில் என்றும் இரண்டு அர்த்தங்கள் உள. வாங்குதல் என்ருல், முன் வாங்குதல் என்பதிற்போல நீக்குதல் என்ற பொருளும், வளைத்தல் என்னும் பொருளும் கொள்ளலாம். வில்லிபுத்தூரர் இப்பதங்களைக் கொண்டு அழகான சிலேடை ஒன்று அமைத்து இராமபிரான் விச்வாமித்திரனுடன் மிதிலைக்குச்சென்று திரும்புகின்ற காலத்தில் அந்த இராமன், "வாங்கியன, பூங்கமலக் கையாலும் ஒருசாபம், காலாலும் ஒருசாபம்" என்று பாடியுள்ளார். இதனில் ஒரே சொல்லை இரண்டு பொருள் படும்படி ஒரே தரம் வைப்பதும், ஒருசொல்லை இரண்டுதரம் இருவேறு பொருள்களில் உபயோகப்படுத்துவதும் ஆகிய இருவித சிலேடைகளையும் காணலாம். இராமன் கையால் ஒருசாபம் வாங்கினுன் - கையால் சிவதனுசை வளைத்தான். காலால் ஒருசாபம் வாங்கினுன் -- காலினுல் அகலிகையின் சாபத்தை நீக்கினுன். வாங்கியன, என்ற ஒரேசொல் வேறு வேறு அர்த்தத்தில் காலோடும் கையோடும் சேரவேண்டியிருக்கிறது. சாபம், சாபம் என்பன இரண்டு தரம் வந்து இரண்டு அர்த்தத்தில் நிற்கின்றன,

இந்தச் செய்யுளில், மாலை என்ற பதம் இப்படிச் சிலேடையாக வந்திருக்கின்றது. தமயந்தி நளனின்

கழுத்திற்குப்புறத்தே ஒரு மாலை சூட்டினுள். மற்றவரசர் கழுத்திற்குள்ளே (மனதிலே) ஒருமாலை சூடிக் கொண்டனர். முன் மாலை மணமாலை. பின் மாலை மாலைக் காலம், இருள்.

மால், என்பதற்கு மயக்கம் என்ற பொருள் உளது. அதற்கு இரண்டாம் வேற்றுமை மாலை ஆகும். அப்பொழுது தம்மனதிலே மயக்கத்தைக் கொண்டனர், என்று கூறலாம். ஆனுல் அது இரண்டாம் வேற்றுமை விரியாயிருக்குமாயின் பின்வரும் தகரம் மிகவேண்டும். மாலைத் தம்மனத்தே என்றில்லை யாகையால், மாலை என்பதற்குச் சாயங்காலம் என்று இரண்டன் தொகையாகப் பொருள் கூறினேன்.

திண்டோள் வயவேந்தர் செந்தா மரைமுகம்போய்
வெண்டா மரையாய் வெளுத்தவே—யொண்டாரைக்
கோமாலை வேலான் குலமாலை வேற்கண்ணுள்
பூமாலை பெற்றிருந்த போது. 144.

பதப்பிரிவு :—திண் தோள் வயம் வேந்தர் செம் தாமரை முகம் போய் வெண் தாமரை ஆய் வெளுத்தவே ஒள் தாரை கோ மாலை வேலான் குல மாலை வேல் கண்ணுள் பூ மாலை பெற்று இருந்த போது.

அன்வயம் :—ஒள்தாரைக் கோமாலை வேலான், குல மாலை வேல் கண்ணுள் பூமாலை பெற்று இருந்தபோது, திண்தோள் வயவேந்தர் செந்தாமரை முகம்போய் வெண்தாமரையாய் வெளுத்தவே.

பதவுரை.

ஒள் - ஒளியுடைய
தாரை - கூரிய
கோ - சிறந்த
மாலை - மாலை சூடியிருக்கின்ற
வேலான் - வேலாயுதத்தையுடைய நளன்.
குலம் - பிறந்தகுலம் புகுந்தகுலம் ஆகிய உபய குலங்களுக்கும்
மாலை - மாலைபோன்ற அலங்காரத்தைச் செய்கின்றவளும்
வேல் - வேலைப்போன்ற
கண்ணுள் - கண்களை யுடையவளுமாகிய தமயந்தியின்
பூமாலை - புஷ்பமாலையை
பெற்று - பெற்று
இருந்தபோது - இருந்த பொழுது,
திண் - வலியமைந்த
தோள் - தோள்களையுடைய
வய - வெற்றிவாய்ந்த
வேந்தர் - மற்ற அரசர்களுடைய
செம் - சிவந்த
தாமரை - தாமரைபோன்ற
முகம் - முகங்கள்
போய் - மாறி
வெண் - வெண்மையான
தாமரை ஆய் - தாமரைகளாக
வெளுத்தவே - வெட்கத்தினுல் வெளுத்துப் போயின.

விரிவுரை :—தமயந்தியின் மாலையைப்பெருத அரசர்களுடைய செந்தாமரைபோன்ற முகங்கள் வெட்கத்தால் வெளுத்து வெண்டாமரைபோல் ஆயின. இந்தச் செய்யுளில் மாலை என்னும்சொல் பலஇடத்தில் வந்திருப்பது சிலேடை அணி அல்ல. ஒரேசொல் ஒரே அர்த்தத்தில் ஒரு செய்யுளில் பலவிடங்களில் வருமாயின் அதனைச் சொற்பொருட் பின்வரு நிலையணி என்பர், அதன் இலக்கணம் பிறகு சுந்தலாம்.

மல்லன் மறுகின் மடநா குடனுகச் [லாள்
செல்லு மழவிடைபோற் செம்மாந்து—மெல்லிய
பொன்மாலை பெற்றதோ ளோடும் புறப்பட்டா
னன்மாலை வேலா னளன். 145.

பதப்பிரிவு :—மல்லல் மறுகில் மட நாகு உடன் ஆக செல்லும் மழ விடைபோல் செம்மாந்து மெல் இயலாள் பொன் மாலை பெற்ற தோளோடும் புறப்பட்டான் நல் மாலை வேலான் நளன்.

அன்வயம் :—நல்மாலை வேலான் நளன், மெல் இயலாள் பொன்மாலை பெற்ற தோளோடும், மல்லல் மறுகில் மடநாகு உடன்ஆகச் செல்லும் மழவிடைபோல் செம்மாந்து, புறப்பட்டான்.

பதவுரை.

நல் - அழகிய
மாலை-வெற்றிமாலையால் அலங்கரித்திருக்கின்ற
வேலான் - வேலை உடையவனுகிய
நளன் - நளவேந்தன்,
மெல் - மிருதுவாகிய
இயலாள் - தன்மையுடைய தமயந்தி (இட்ட)
பொன் - அழகிய
மாலை - சுயம்வரமாலையை
பெற்ற - அடைந்த
தோளோடும் - தோளோடு,
மல்லல் - வளப்பம் பொருந்திய
மறுகில் - வீதியில்
மட - இளமை பொருந்திய
நாகு - பசு
உடன் ஆக - கூடவர
செல்லும் - போகின்ற
மழ - இளமையாய
விடைபோல் - இரஷபத்தைப்போல்
செம்மாந்து - களிசிறந்து
புறப்பட்டான் - (தமயந்தியோடு) புறப்பட்டான்.

இதற்கிடையில், சுயம்வரத்திற்கு வந்திருந்த வானவர்கள் செய்தியைக் கவி கூறுன்ருர்.

வேலை பெருவமுதம் வீமன் றிருமடந்தை
மாலை பெருதகலும் வானுடர்—வேலை
பொருங்கலிநீர் ஞாலத்தைப் புன்னெறியி லாக்கு
மிருங்கலியைக் கண்டா ரெதிர். 146.

பொழிப்புரை:-பாற்கடலில் பிறவாத அமிர்தம்போல்வாளாகிய வீமராஜனின் அழகிய மகளின் மணமாலையை அடையாமல் அகல்கின்ற தேவர்கள், கரைமீது மோதி ஒலிக்கின்ற கடலால் சூழப்பட்ட உலகத்திலுள்ளவர்களுக்குத் தாழ்மை யுண்டாக்கித் துன்பம் செய்கின்ற கலிபுருடனை எதிரே வரக்கண்டனர்.

ஈங்குவா வென்னென் றிமையவர் தங் கோன்வினவத்
தீங்கு தருகலியுஞ் செப்பினு—னீங்கள்
விருப்பான வீமன் றிருமடந்தை யோடு
மிருப்பான் வருகின்றேன் யான். 147.

பொழிப்புரை:—வந்த கலிபுருடனைத்தேவேந்திரன், "இங்கு நீ எதற்காக வருகின்ருய்" என்று வினவ, தீமையைச் செய்கின்ற அக்கலியும், 'நீங்கள் விரும்பிய வீமன் புத்திரியோடு இருக்க நான் வருகின்றேன்' என்ருன்.

மன்னவரில் வைவே னளனே மதிவதனக்
கன்னி மணமாலை கைக்கொண்டா—னுன்னுடைய
வுள்ளக் கருத்தை யொழித்தே குதியென்ருன்
வெள்ளைத் தனியானை வேந்து. 148.

பொழிப்புரை :—“வந்த அரசர்களிலெல்லாம் கூரிய வேலையுடைய நளனே, சந்திரன்போன்ற முகத்தை யுடைய தமயந்தியின் மணமாலையைப் பெற்றான். ஆகை யால் உன் மன எண்ணத்தைவிட்டு வந்த வழியே போ” என்று ஐராவதத்தையுடைய இந்திரன் சொன்னான்.

விண்ணரசர் நிற்க வெறித்தேன் மணமாலை
மண்ணரசற் கீந்த மடமாதி—னெண்ணங்
கெடுக்கின்றேன் மற்றவடன் கேள்வனுக்குங் கீழ்மை
கொடுக்கின்றே னென்றான் கொதித்து. 149.

பொழிப்புரை :—அதுகேட்ட கலி, கோபங்கொண்டு “தேவர்களிருக்க மதியாமல் வாசனையுடைய தேனொழுகும் மணமாலையை மண்ணாளும் அரசனுக்கு இட்ட அவ்வறிவில்லாப் பெண்ணின் எண்ணத்தைச் சிதைத்து அவன் நாயகனுக்கும் கீழ்மை செய்கின்றேன்” என்றான்.

வாய்மையுஞ் செங்கோல் வளனு மனத்தின்கட்
டூய்மையு மற்றவன் றோள்வலியும்—பூமா
னெடுங்கற்பு மற்றவற்கு நின்றுரைத்துப் போனா
னடுங்கொற்ற வச்சிரத்தா னங்கு. 150.

கருத்து:—அதன்மேல், இந்திரன், நளனது மேன்மையையும் தமயந்தியின் கற்பையும் பற்றிக் கலிபுருடனுக்குச் சொல்லிப் போயினான்.

செருக்கதிர்வேற் கண்ணியுடன் றேர்வேந்தன் கூட
விருக்கத் தரியே னிவரைப்—பிரிக்க
வுடனாக வென்றா னுடனே பிறந்த
விடநாக மன்னன் வெகுண்டு. 151.

கருத்து:—நளனையும் தமயந்தியையும் பிரித்து வைப்பதாகச் செல்லிக் கலிபுருடனும் போயினான்.

இலக்கிய ஏற்ற அராய்ச்சி.

சிறப்பு முறைகள்.

[452-ம் பக்கத் தொடர்ச்சி]

நூலின் வடிவம்.

நூல் என்பது அழியாவுடம்பு. ஆகையால் அதிலுள்ள ஒவ்வொரு படலங்களும், ஒவ்வொரு அவயவங்களாக விளங்கவேண்டும். இதன்றியும் ஓர் அவயவம் உள்ள இடத்தில் மற்றொரு அவயவம் வைக்கப் பொருந்தாது. இதனால் படலங்கள் வரும் முறையை நூலாசிரியன் கவனித்து எழுதல்வேண்டும்.

ஒவ்வொரு படலமும், ஒவ்வொரு அவயவமாதலால் அவ்வவயவ அங்கங்கள் ஒரு அணுவேனும் பழுதின்றி இருத்தல்வேண்டும். எனவே படலங்களிலுள்ள பாக்களின் முறை, நினைக்கக் கூடியவாறு மாற்றல் எலாது. எல்லாப்பாக்களும் முத்தகச் செய்யுளாயிருப்பினும், விடயத்தில் ஒவ்வொரு பாவும் பின்வரும் பாக்களுக்குக் குளகம்போல் ஒன்றினின் றொன்றுக்குத் தர்க்க ஒழுங்கில் பாய்ந்து வீழ்ந்து ஓடவேண்டும். இவ்வாறு ஒவ்வொரு படலத்திலுள்ள பாக்கள் இயலும், படலங்களிற்கும் ஒழுங்கும், குற்றமற்றிருப்பின் அந்நூலே புகழ் உடம்பு பெற்றது எனலாம்.

9. வசன இலக்கணம்.

தமிழ் இலக்கியத்தில், சங்கத்தார் காலத்தில், பெருந்தேவனார் பாரதத்திலுள்ள வசனம்போல்வதன்றி, வேறு இலக்கியம் என்று காட்டக்கூடிய வசன நூல்கள், யாதொன்றுமில்லை. உரையாசிரியராய், இறையனார் அகப்பொருளுக்கு மதுரைக் கடைச்சங்கத்துப் பெரும்புலவர் கணக்காயனார் மகனார் நக்கீரனார் எழுதிய உரை வசனமேயாயினும் அவ்வசனம் அவர் பாடிய பாக்களுக்கும் கடினமாயிருக்கின்றது. உரையாசிரியர்களான நச்சினார்க்கினியர் பரிமேலழகர் அடியார்க்குநல்லார் முதலானோர் எழுதிய உரைகள் யாவும் வசனமெனப் பேர்பெற்றிருந்தும் அவ்வுரைகள் அவ்வந்நூல்களினும் கடினமாய்க் காணப்படுகின்றன. இவ்வசன உரைகள் செய்யுள் இலக்கணத்தைச் சார்ந்தவைபோல் காணப்படுகின்றனவேயன்றிச் சம்பாஷணையில் உபயோகிக்க கூடாதனவாயிருக்கின்றன.

இவ்வித அரிய தமிழ் உரைகளன்றி, நம் முன்னோரியற்றிய தமிழில் வசனநூல் என்று எடுத்துக்காட்டயாதொன்றுமில்லை. இவ்வாறு கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் தமிழ்இலக்கியத்தில் வசனமென்பதே இலக்கிய உருவத்துடன் இல்லாததால், இருவித போலித்தமிழ்கள் வசன ரூபத்துடன் பிரவேசித்தன. இவை தமிழுக்குச் சொந்தப் பிள்ளைகளல்ல. ஆதலால் அவற்றைத் தமிழினின்று நீக்குதல் கற்றோர் கடனாம். தமிழினின்று நீக்கவேண்டிய போலித்தமிழாவன, மணிப்பிரவாளம் ஒன்று, பறைத்தமிழ் இரண்டு. மணிப்பிரவாளம் என்பது பாதி வடமொழியும், பாதி தமிழ் மொழியும் கலந்து உபயோகித்தல். இது வைணவர்களால் தமிழில் நுழையலாயிற்று. மணிப்பிரவாளத்தை உபயோகிப்பதைக்காட்டிலும், பாதி தமிழும் பாதி ஆங்கிலமுமாக நூல் எழுதுவது சிறப்பேயாம். நமது பாடைக்கு இரண்டாவது இரவற்பிள்ளை கிருஸ்தவர்களாலே கொண்டு வரப்பட்டது. இதைக் கற்றோர் பறைத்தமிழ் என்று கூறுவர். ஆங்கிலத்திலுள்ள கிருஸ்தவ வேதம் (பைபில் என்று சொல்லப்படுவது) சுத்தமான ஆங்கில இலக்கியமாம். தமிழ் கிருஸ்தவ வேதநூலைச் சற்று நாம் திறந்து பார்த்தால் எவ்விடத்திலும் அந்நூலில் தமிழைக் கொலை செய்திருப்பது கண்டு நாம் அஞ்சுவோம். அகராதிகளின் அங்கங்களில் மாத்திரமல்ல; நடை உடை யாவும் அத்தமிழ் சர்வ விகாரமாயிருக்கும். இத்தகைய நடையைப் பறைத்தமிழ் என்பது. கிருஸ்தவர்கள் தக்க வித்வான்களைக் கொண்டு அவர்கள் வேதத்தைச் செந்தமிழ் நடையில் எழுதுவாராயின், அவர்களுக்கும் நமதுபாடைக்கும் மேன்மையுண்டாம். ஆகையால் இவ்வித இரண்டு போலித்தமிழ் வழிகளும் சாராமல் தற்காலத்தில் வசனம் எழுதவேண்டும்.

வசனத்திற்கும், பாட்டிற்கும் உள்ள பேதம் யாவை?

(i) வசனம் கற்றோர்க்கும் மற்றோர்க்கும் எளிதில் பொருள் புலப்படுவது. செய்யுளைச் செவ்வனே அறியக் கல்வி இன்றி அமையாது. இது முதல் பேதம்.

(ii) இரண்டாவது, வசனத்தில் உரிச்சொல் வாரா. பெரும்பாலும் திரிசொற்களும் நிறையா. ஏனெனில் உரிச்சொல்லும் திரிசொல்லும் வசனத்திற்குச் செய்யுள் உடைகொடுக்கும். ஆகையால் அத்தகைய சொற்களை வசனத்தினின்று நீக்குவதே அழகு.

(iii) மூன்றாவது, செய்யுளில் எண்வகைப் பொருள்கோளும் பொருந்தும். வசனமோ ஆற்றொழுக்காய் நிற்கவேண்டும். (iv) நான்காவது, வசனத்தில் மோனை எதுகைகளுடன் விளையாடலாகாது. வாக்கியங்கள் ஒழுங்காய் ஒன்றை ஒன்று கிரமத்துடன் பின்பற்றுவதுடன், விடயங்கள் “நேரின மணியை நிரைபட வைத்தாங்கு” ஒவ்வொரு கண்டங்களையும் பிரித்துக் காட்டல்வேண்டும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் பலவசன இலக்கியங்கள் வெளியாயின. நவீனங்கள் என்று வந்த அசுத்த இலக்கியத்தை நாம் கவனிக்க வேண்டியதில்லை. ஆயினும் அவற்றுள் சிற்சில நல்லிலக்கியங்களாகவும் இருக்கின்றன. இதன்றியும் பத்திரிகைகள் ரூபமாய்ப் பிரதிதினம் பிரசுரமாவதும், வாரத்திற்கு, மாதத்திற்கு ஒரு முறை வெளிவருவனவும் பலவுள. இவற்றில் சில செந்தமிழ்ப் புலவர்களால் நடந்தேறுவதால் தமிழ் வசன இலக்கியம் அவற்றின் மூலமாயும் விருத்தியாய் வருகின்றது. ஜனவிநோதினி என்னும் பத்திரிகை பல சஞ்சிகைகள் ரூபமாக வெளிவந்த பின்னர், அகால மரணமடைந்தது. தமிழில் வியாசங்கள், அதிரசமஞ்சரி முதலியன, ஆங்கிலத்தின் வசன நடையை ஒத்திட்டு எழுதப்பட்டன. தமிழில் சுத்தமான வசனம் எழுதினவரும் எழுதுவதற்கு வழிகாட்டினவரும் பலர் இருப்பினும், அவர்களில் மேலாகக் காட்டக் கூடிய ஏற்றம் பெற்றவர் காலஞ்சென்ற திருமணம், செல்வகேசவராய முதலியார் அவர்களே. இவர் ஆங்கிலத்தில் நிபுணராயும், சர்வகலாசாலையில் அக்காலத்தில் அருமையான எம். ஏ. பட்டம் பெற்றும், பச்சையப்பன் கல்லூரியில் தமிழ்த் தலைமைப் புலமை நடாத்தினவருமாம். இவர் எழுதிய வசன நூல்கள் பல. அவை பெரும்பாலும் வியாசங்களாய் வெளிவந்தன. இவர் வியாசங்களெல்லாம் ஆங்கிலத்தில் அடிசன் (Addison) நடைபோல் விளங்கும்.

தமிழ் வசனங்கள் இருபதாம் நூற்றாண்டில் எவ்வுருவமும் பெறலாயிற்று. நாடகமும் வசனமாகவே இருக்கின்றது. நாடகத்தமிழ் எத்தன்மைத்து என்பது நாம் முற்றும் மறந்து விட்டோம். இருபதாம் நூற்றாண்டு இசைத் தமிழும் வசனமா யிருக்கின்றது. செய்யுளும் மோனை எதுகையை நீக்கிப்பார்ப்பின் வசனம்போலவே விளங்கும். இந்நிலைக்குத் தமிழ் வந்துவிட்டது நாம் செய்த பெரும் பாக்கியமன்றோ? இதை நாம் எடுத்துப் பழிப்பின், இக்காலமே வசனம் வாதாடு காலமென்று நூதனக் கல்வி கூறும்.

10. முடிபுரை.

முன்னர் வகுத்துக்காட்டியதை சற்றுத் தொகுத்துச் சுட்டுவோம். தமிழில் இலக்கியஏற்ற ஆராய்ச்சி நூலென்பது இதுவரையிலும் எவரும் வெளிபிடவில்லை. ஆயினும் தமிழ் மரபுக்கு மாறாக இதை முதனூல் பகுதியில் சேர்க்க யான் இங்கு முயலாவிடினும்,முன்னோர் நூலில் இங்கு ஒன்று அங்கு ஒன்றாக உள்ள பல கொள்கைகளை மனம் போனவாறு தொகுத்த இச்சிறிய நூல், வழிநூல் எனினும் பொருந்தும். சார்புநூல் எனினும்பொருந்தும்.

மேல் நாட்டிலே, இலக்கிய ஆராய்ச்சி நூல்கள் பற்பல விருப்பினும் அவற்றையும், அவற்றின் கொள்கைகளையும் இதற்கு முதல் நூலாகக் கொள்ள யான் துணியவில்லை. ஏனெனில் அவர்கள் வழக்கமும் நமது வழக்கமும் முக்கியமான அம்சத்தில் நேர் விரோதமாயிருக்கின்றன. நாம் நூலெழுதுவோமானால் முன்னோர் நூலையே அடிப்படையாகக் கொண்டு அதன்மேல் நமது கட்டிடத்தை நிலை நிறுத்துகின்றோம். ஆங்கிலேயர் முதலிய, ஐரோப்பியர்களோ, அவ்வாறு செய்வதில்லை. இன்று வெளிவரும் நூலாசிரியன், நேற்று எழுதினவனை மூடனாக்குவான். அம்மாதிரியே “வாழையடி வாழை” என, நாளைவரும் நூலாசிரியனும் இவன் எழுதிய நூல் முற்றும் குற்றமென்பான். இதுதான் மேல்நாட்டு இலக்கியவேற்ற ஆராய்ச்சி நிற்கும் நிலை. நாமோ நம்மை மூடரென்று ஒப்புக்கொள்வோமே யன்றி நமது முன்னோரை மூடரெனப் பழிக்கவும் அத்தகையை பழிப்புக்கு இடங்கொடுக்கவும் சற்றும் ஒவ்வோம்.

இதன்றியும் நூதன நாகரிகத்தில் நாம் கல்வி எத்துணைப் பெற்றவரெனப் பட்டம் பெறினும், தாயுமானவர் கூறியவாறு “கற்றதெல்லாம் மூடம், கற்றதெல்லாம் மூடமென்றே கண்டனையும் அன்று,” என்னும் நிலையைப் பெற்றிருக்கின்றோம் என்பதற்கு யாதொரு சந்தேகமில்லை. நமது முன்னோரோ, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியைக் கணிதநூல் வரம்புபோல என்றும் பிறழாத அளவைகளில் வகுத்துக்காட்டி யிருக்கின்றனர். நூலின் பத்துக்குற்றம், மூவாயிர வருடத்திற்கு முன் எப்படிக் குற்றமென்று எண்ணப்பட்டனவோ, அவ்வாறே, இனி மூவாயிரவருடத்திற்குப் பின்னரும் எண்ணப்படுவதற்கு ஐயமில்லை. அம்மாதிரியே நூலின் அழகுகளும் எக்காலத்திலும் வியக்கத்தக்கனவாய் விளங்கும்.

இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியில்உள்ள முறைகள், நூலின் உள்ளுடம்புக்கு மாத்திரமன்றி, மேற்போர்வைகளாகிய பொதுப்பாயிரம் சிறப்புப்பாயிரம் இவற்றிற்கும் நம் முன்னோர் ஏற்படுத்தி யிருக்கின்றனர். எல்லாவித உயிர்களும் அறுவகைச் சில வகுப்புக்களில் பிரிந்து அடங்குவதுபோல், எல்லா நூல்களையும் தமிழ்ப் பேரறிவாளர் அகப்பொருளைக் காட்டும் நூல்களென்றும் புறப்பொருளைக் காட்டும் நூல்களென்றும் பிரித்து அவற்றில் ஒவ்வொன்றிலும் உட்பிரிவுகளாக்கி நூலெனப்படும் எவற்றையும் அடக்கலானார்.

189007

ஆன்றோர், நூலினங்கத்தை மாத்திரம் பொதுப்படையில் இலக்கணங்கூறாமல் ஒவ்வொரு தாதுக்களையும் தனித்தனியே எடுத்துப் பரிசோதித்து அவற்றிலுள்ள யந்திர நிலைகள் காட்டுவதுபோல் ஓசையின் வடிவமாகிய எழுத்திலக்கணமும் நாத அமைவான சொல்லிக்கணமும் ஒழிபும் யாப்பு அணிமுறையும் பேரிலக்கண வாயிலாகக் காட்டினார். ஆன்றோர் மொழியைப் பின்பற்றி நாமும் எந்நூலை ஆராயப் புகுந்தாலும் அந்நூலிலுள்ள மேன்மை கீழ்மை, குற்றம் குணம், அந்தம் விகாரம், நன்றாய்ப் பகுத்தறிந்து எடுத்துக் காட்டலாம்.

மேலோர் நடையைக் கைப்பற்றுதல், பிறர் நூலிலுள்ள குற்றங் கூறுதலும் களைதலுமாம் தொழில்களுக்கு மாத்திரம் பயனும் என்று எண்ணலாகாது. பற்பல கலைஞான ரசங்களைக் கண்டறிவதற்கும் அவற்றை நாம் எழுதும் நூல்களில் கலக்கவைப்பதற்கும் பயன்படும். எனினும், அதுகவிகளாலாக்கும் நூல்களுக்கு மாத்திரம் பயன்படுவதென எண்ணலாகாது. சம்பாஷணையிலும் பிரசங்கத்திலும் வசனமாக எழுதும் எத்தகைய விடயங்களிலும் இருபதாம் நூற்றாண்டிலும் பயன்கொடுக்கு மென்பதற்கு யாதொரு ஐயமில்லை. ஆகையால் நூலின் இலக்கியவேற்ற ஆராய்ச்சி விதிகள் முன்னோர் ஆங்காங்கு மொழிந்தனவற்றைத் தேனீ கூடு கட்டுவதுபோல் இத்தேனைத் திரட்டிக் கட்டிவைப்போமாயின் நமது இலக்கியத்தில் வரும் எந்நோய்க்கும் மருந்து கொடுக்கத்தக்க துணைக்கருவியான அருமருந்தாய் நிற்கும்.

E. T. சொக்கம்மாள்.

முற்றிற்று.

"மாசில் வீணையும்."

[இத்தொடக்கத்துத் தேவாரத்தை விரித்துரைத்து ஸ்ரீமான் V. நாராயண ஐயர், M.A., M.L. திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் மடாலயத்தில் 2-6-'28ல் செய்த வேோர் உபந்யாசத்தின் சாரம்.]

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசனெந்தை யிணையடி நீழலே.

இது திருநாவுக்கரசு சுவாமிகள் அருளிச்செய்த தேவாரம். இதனால் திருவடி நீழலை அநுபவித்த நாயனார் உலகினருக்கு அத்திருவடி நீழலின் சிறப்பை எடுத்து ஓதுகின்றார். 'திருவடி நீழல்' என்பது என்ன? அது எங்கிருப்பது என்ற வினா முதன்முதல் எழுகின்றது. 'திருவடி நீழல்' என்பது பகவானுடைய திருவடிகளின் கீழதான இடம். அது நீழலைப்போன்று மனதிற்கு ஆஹ்லாதத்தைத் தருவது. வெயிலின் வெம்மை உணர்ந்தாருக்கு நிழலின் தண்மையும் அருமையும் நன்கு தெரியும். எனவே, ஸம்ஸாரிகளான எல்லா ஜீவராசிகளும் திருவடி நிழல், எவ்வளவு ஆனந்தத்தைத் தருவது என்பதை ஊகித்து அறியக்கூடும். 'அகலமளக்கிற்பாரில்லாவடி' 'கணக்குவழக்காகக் கடந்தவடி' பகவானுடைய திருவடி, ஒன்றும் புறம்பாகாதபடி சகல உலகங்களையும் தன்னுடைய நீழலில் அகப்படுத்திக்கொள்ளும் பெருமையுடையது. ஆகவே, அந்நீழலுக்குப் புறம்பாகத்தக்கவர் யாரும் இல்லை; ஆயினும் நாம் திருவடியைச் சேவைசெய்து அடையாவிட்டால் நாம் அந்நீழலின் சிறப்பை புணராதுபோய் அதற்குப் புறம்பாகின்றோம். எனவே திருவடிநீழலுக்கும் மற்றத்தருவினது சாயைக்கும் உள்ள பேதம் நன்கு புலப்படுகின்றது. ஏனைய நிழல் ஒரோ இடங்களில் மட்டும் பொலிவது. அங்குள்ளார் மனம் எத்தன்மையதேனும் நிழற்றருவது. அங்ஙனமன்றித் திருவடி நீழல் எங்கும் பரந்துள்ளது; ஆயினும் பகவானை வழிபடுபவர்க்கு மட்டும் நிழல்தருவது. இவ்விதமான அரியகுணத்தை ஐந்து சிறந்த உதாரணங்களால் அப்பர் சுவாமிகள் எடுத்து விளக்குகின்றார். வீணையும் மதியமும் தென்றலும் வேனிலும் பொய்கையும் சேர்ந்தாருக்கு இன்பம் விளைத்துப் பிரிந்தார் துன்பத்தைப் பன்மடங்கு பெருக்குவன. அதுபோலவே அடியாருக்கு இன்பம் அளிப்பது திருவடியின் தகவு என்பது இவ்வுதாரணங்களாலான முக்கியபயனாகும். 'அழகெழுதலாகா வருட்சேவடி' என்ற திருவடி நீழலின் போக்யதையை உதாரணங்களால் காட்டமுடியாது என்பதை நாயனார் உணர்த்தும், வேறு வழியின்மையால் பேரின்பத்தின் பொருளை சிற்றின்ப உதாரணங்களைக்கொண்டு ஒருவாறாக நிரூபிக்கலாமெனக் கருதி இந்திரிய ஜநிதமான இன்பங்களை இன்ப அளவைகள்கொண்டு விளக்குகின்றார். ஐந்து உதாரணங்களால் செவி, கண், மூக்கு, வாய், ஸ்பரிசம் முதலியவற்றால் வரும் இன்பங்களைத் தனித்தனி உதாரணமாக்கியும் எல்லாம் ஒருசேரக் கொண்டாலும் அடி நீழலிலுள்ள பேரின்பத்திற்கு நேராகாது என்பதைக் குறிப்பாக வைத்து "வீணையும் மதியமும் தென்றலும் வேனிலும் பொய்கையும் போன்றது" என்கிறார்.

'மாசில் வீணை' என்றது வேதகானத்திற்கும் தேவாரப் பண்ணிற்கும் துணையாகவுள்ள வீணையாகிய யாழ் ஆதலின்; ஏனைய இசைக்கருவிகள் சிற்றின்பத்திற்கே அமைந்தனவாதலால் அவற்றினின்றும் வேறுபிய வீணை மாசற்றது; வீணைதடவியே தம்முள்ளத்திற் புகுந்தார் என்பதும் திருஞானசம்பந்தர் திருவாக்கு "மிகநல்ல வீணை தடவி என் உளமே புகுந்த அதனால்" இவ்வாறு அடியார் மனத்தைக்கவரும் வீணாகானத்தைத் திருவடி நீழலுக்கு ஒருவாறாக ஒப்பிடலாம் என்கிறார்; "துடங்கு கேள்வி இசையென்கோ?" 'முன் நல்யாழ் பயில் நூல் நரம்பின் முதிர்சுவையே" என்றார் பிறரும்.

மாலை மதியமும்—மதியம் என்பது அழகு நிரம்பிய பூர்ண சந்திரனை; பூரணையன்று சந்திரன் அஸ்தமித்ததும் முழுக்கலைகளோடு உதயமாகி உலகமுற்றும்தன் நீழலின் கொள்வதால், அது திருவடிக்கு உபமானம் ஆயிற்று. முழுமதியத்தைச் சக்கிரவர்த்தியின் திருக்குடைக்கு உபமானமாகச் சொல்வது கவிமரபு. அதுபற்றி நோக்கினும் 'மாலைமதியம்' என்றதால் திருவடி உலகமுழுமையையும் அகப்படுத்திக்கொண்டு எங்கும் அமுதமயமாக்கி நிலவு பொழியும் தண்ணிய நீழலைப் பரப்புகின்றது என்னும் உண்மை பெறப்படுகின்றது. மாலை என்றதால், அடியாரை அல்லலாம் இருள் சேர்வதன்முன்னம் கடும்பகலின் வெம்மையை நீக்கி இன்பம் தரும் சந்திரன் போன்றது திருவடி என்பது கிடைக்கின்றது. 'அல்லல் என்னும் இருள் சேர்தற்கு உபாய மென்னே" என்றார் பிறரும். 'மதியம்' என்றதால் மைவானிரும் வாகற்றுது மாழாந்து தேம்பும் இளஞ்சந்திரன் விலக்கப்பட்டது.

'வீசு தென்றலும்' என்றது தைவரும் தண் தென்றலை; வீங்கு இளவேனில்; இன்ப நுகர்ச்சிக் குரியதாய் விளங்கும் இள வேனிலாய சித்திரை வைகாசி மாதங்கள். ஆகவே இன்று இச்சமயம் போன்ற பொழுது குறிக்கப்படுகின்றது.

சந்திரனைக்கண்டு விகாசமடையும் மலர்களிலே குடைந்து தேன் மாந்திய வண்டு இசைபாடப் பெற்ற பொய்கை என்கிறார் 'மூசுவண்டறைப்பொய்கை'என்று; இளவேனிற் காலத்திலே மாலைப் பொழுதிலே, தென்றல் வீச, வீணாகானம் நிகழ, வெண்ணிலவிலே அல்லிகள் மலர்ந்த தடாகத்திலே நிகழும் நீர் விளையாட்டமே பகவதநுபவத்தை ஒருவாறு ஒக்கும் என்பது அடியார் நமக்கு அவ்வநுபவத்தின் உணர்ச்சிக்குத் திசைகாட்டிச் செல்லும் உதாரணமாகும். இந்நீர்விளையாட்டின் முழு இன்பம் பூமத்திய பிரதேசத்திலுள்ள இந்தியர் முதலியோரே நன்கறிவர். இவ்வாறான இன்பத்தைக் கொண்டே பேரின்பத்தை ஒருவாறு அளவிடத் தொடங்கலாம்; ஆகையாற்றானே பிறரும் "பொய்கை நீராடப்போனான்" என்பதை பகவதநுபவத்தை நாடும் அடியாரைக் குறித்துச் சொல்வர். "படிந்து குடைந்தாடி, அடியேன் வாய்மடுத்துப் பருகிக் களித்தேனே" என்றார் நம்மாழ்வாரும்.

இவ்வாறு இன்பம் தருவது யாருடைய அடிநீழல் என்னில், 'ஈசன்'.—சகல ஜீவராசிகளையும் படைத்துக் காத்து அழித்து அளிக்கும் நாயனான பரமசிவன். ஆயினும், அவனுடைய ஈசுவரத்தன்மை கண்டு பயந்து அவனடியை அணுகாது பின்வாங்க வேண்டுவதில்லை. ஏனெனில் தேவர்களுக்குத் தம்பிரானாயினும் எமக்குத் தந்தைதாய் போன்றவன்; 'எந்தை' ஆகவே, நம் சிறுமை கண்டும் நம்மைத் தாயினும் பரிந்து ஏற்கும் ஈசனின் இணையடியையணுக நமக்கு விசேஷயோக்யதை வேண்டுவதில்லை. "அவன் ஈசன், நாம் அடியோம்; அவன் எந்தை, நாம் அவன் மக்கள்" என்னும் உணர்ச்சியே போதும்; "நீராடப்போதுவீர், போதுமினோ," என்று வாறு, பகவதநுபவமாம் பொய்கை நீராடுவதற்கு நீராட வேண்டுமென்ற விருப்பமே அமையும்.

இணையடி: ஒன்றோடொன்று இணையும் அடிகள்-அதாவது அடியார் அல்லல் தவிர்த்து இன்பம் பயப்பதில் ஒன்றுக்கு ஒன்று போராடும் அடிகள்; அடிகள் இரண்டாயினும், பலப் பிராப்தியிலே ஒன்றாக அமைவன, ஒன்றுக்கு ஒன்று தவிர வேறு இணை அற்றன என்பதும் குறிப்பு.

'இணையடி நீழல்' என்பதால் கரும ஞான மார்க்கங்களினின்றும் வேறுபட்ட பக்தி மார்க்கமாகிய அடிமைத்திறனைக் குறிக்கின்றார். இங்கும் இன்பமாய் விளங்கி அங்கும் இன்பம் தருவது எனவே இவ்வழிபற்றி நடப்போர், இங்கேயே மோக்ஷானந்தத்தை அநுபவிக்கத் தொடங்குகின்றனர். இறந்த பின்பே திருவடி நீழலை அடைபவர் அல்லர். அப்பர்சுவாமிகள் போன்று இங்குத்தானே அவ்வானந்தாதிசயத்தைப்பெறுவர். உலகருக்கு இவ்வானந்தத்தைவிளக்க வேண்டுமானால் அவர்கள் பேசும் பேச்சாகவே பேசவேண்டுமென்று சிற்றின்பத்தை விளக்கிக் காட்டுவதுபோல, 'மாசில் வீணையும்' என்று தொடங்கி, இறுதியில் பேரின்பத்தின் வருணனையாக முடித்தனர்போலும்:—

ஆகவே, இப்பாட்டினால் நமக்கு நாயனார் போதிப்பது என்ன எனில், "ஈசன் அடி நீழலாகிய பக்திமார்க்கம் இருக்கின்றது. எல்லோரும் வாருங்கள். வந்து, வழியும் இது பலனும் இது, என்று இதன்சிறப்பை என்போன்று என்னுடனே அனுபவித்துத் திருவடி நிழலிலேஇன்றே இப்பொழுதே அமருங்கள்" என்பதே வீணாகானம், மதியம், தென்றல், வேனில், பொய்கை. இவைகளை ஜனங்கள்சேர்ந்து அநுபவிப்பதால் அநுபவிப்பாருக்கு இன்பம் குறைவுபடுவதில்லை. ஒருவரை யொருவர் கூடின இன்பாநுவம் அதிகப்படுகின்றதே யொழிய மட்டுப்படுதில்லை. அதுபோலவே அடிமைப்பயனும் கைங்கரிய ஸ்பாவமான மோக்ஷாநுபவமும். ஈசன் கொள்ளக் குறைவிலன்; கொள்வார் இன்றேல் மட்டுமே குறைவுடையன்; அவ்வாறு நமக்கே அளிக்கும் அடிமைப்பயனை நாம் எல்லோரும் சேர்ந்து நுகர்ந்து இன்புறுவோமாக.

சொல்லாட்டம்.

சொற்களின் எழுத்துக்களைப் பிரித்தும் சேர்த்தும் அமைத்தலால் அர்த்தம் வேறுபடுவதை ஆதாரமாகக் கொண்டு ஒருவரையொருவர் கேட்டுப் பொழுதுபோக்குதற்கு உதவியா யிருக்குமென்று நமது நண்பர் ஒருவர் கீழ்வரும் வினாக்களை அனுப்பியிருக்கின்றார். சிலருக்கு அது 'சுவாரஸ்யமா' யிருக்குமென எண்ணி அவற்றுள் சிலவற்றை இங்குத் தருகின்றோம். விடை எமக்கு எழுத வேண்டியதில்லை. மறுவாரப் பத்திரிகையில் விடையை எழுதுவோம்.

விடைதேடுவது எங்ஙனமென அறியக் கீழ்வரும் உதாரணங்கள் உதவியாம்:—

I. கால்போனால் குதிக்கும், தலைபோனால் மறைக்கும், இடைபோனால் குலைக்கும்,மூன்றுமாய் ஓடுமோர் விலங்கு எது?

இது மூன்று எழுத்துக்களையுடைய ஒருசொல், 'கால்' என்பது கடை எழுத்தையும், இடை என்பது நடு எழுத்தையும், தலை என்பது முதலெழுத்தையும் குறிக்கும்.

இதற்கு விடை :—குதிரை. கால் அல்லது கடை எழுத்துப் போனால் குதி. தலை அல்லது முதல் எழுத்துப் போனால் திரை (மறைக்கும்). இடை அல்லது நடு எழுத்துப் போனால் குரை - குலைத்தல். மூன்று எழுத்துக்களுமாய் ஓடும் குதிரை.

(II) அல்லது எழுத்துக்களின் வரிசையை 1, 2, 3, 4 என்னும் எண்களாலும் குறிக்கலாம் :—

இருக்குமிடம் முன்னிரண்டு. அவ்விடத்தில் இருப்பதுவும் பின்னிரண்டு. நாலுமாய்ச் சேர்ந்தாலோ நர்த்தனஞ் செய்வாள் ஒருத்தி?—ஊர்வசி. முன்னிரண்டு எழுத்துக்கள் சேர்ந்து ஊர்-இருக்குமிடம்.பின்னிரண்டு எழுத்துக்கள் சேர்ந்து வசி-அவ்வூரில் இருப்பது.நாலும் ஊர்வசி-நடனம் செய்பவள்.

(III) பெறுவதும் மூன்று, நிற்பதும் இடையொடிந்து, தலையறுந்து போனாலும் இருக்குமே தலை?

மதலை :—மூன்று எழுத்துக்களும் மதலை - குழந்தை. இடை ஒடிந்தால், அதாவது நடு எழுத்துப் போனால், மலை - நிற்பது. தலை அறுந்துபோனால், அதாவது மதலை என்பதில் தலை எழுத்து (முதலெழுத்து) அறுந்துபோனால் எஞ்சி இருப்பது தலை, என்னும் இரண்டெழுத்துக்கள்.

இவ்வாறே இனி வருவனவற்றிற்கு விடை தேடிக் கொள்ளலாம்: —

சொல்லாட்டம் 1.

(1) இடுப் பொடிந்தால் சிரமாகும், சிரமொடிந்தால் மீன் பிடிக்கும், ஒரு பாத்திரம்?

(2) முதலொழிந்து நின்றவர் கடை யொழித்துக் குடிப்பர், ஒரூர்.?

(3) நடுவின்றிப்போரிலே ஊதும், தலையின்றிக் காட்டிலே ஓடும், மூன்றுமாய்க் குளத்திலே பூக்கும், மலர்?

(4) நடுவைக் கிழித்து இடுப்பிலே உடுக்கலாம், ஓர் பறவை?

(5) முன்றுமில்லாததாலன்றோ ஏகலைவனுக்கு முன்னும் பின்னும் பயனற்றுப்போயது?

(6) இருந்தபுத்தி போமையா இடையிலே வலிவந்தால்?

(7) தலையறுத்துக் கையிலும், இடையொடித்துக் காலிலும் போடலாம், குதித்துவந்த ஜந்துவைப் பிடித்தெடுத்து?

(8) தலைநின்று ஆள்பவன், பின்னிரண்டால் வெல்வதற்கு நடுவொடித்து எய்வனே. மூன்றுமே சேர்ந்தக்கால் இருப்பிடம் கடவுளுக்கே?

(9) இடைபோனால் எது வாகும் ஓர் விலங்கு?

(10) தலையின்றி உடலிலே, இடையின்றித் தெருவிலே, மூதலும் மற்ற இரண்டிலே மூன்றுமே கடலிலே இருக்குமே யொன்று?

கம்ப ராமாயணம்

பால காண்டம்

5. திருவவதாரப் படலம்.

(456-வது பக்கத் தொடர்ச்சி)

அருளே மெய்யம் மெய்யே அழகு.

கணிகையர் செய்த புணர்ப்பினால் உரோமபத நாட்டினை யடைந்து வாழ்ந்த கலைக்கோட்டுப் பேர் முனியை வசிட்டன் உரைத்தபடி தயரதன் தன்னக ரழைத்து வந்து புத்திரகாமேட்டி யாகத்தை முற்றிய பின்னர், அதன் பலனாய்,

ஒருபக லுலகெலா முதரத் துட்பொதிந்
தருமறைக் குணர்வரு மவனை யஞ்சனக்
கருமுகிற் கொழுந்தெழில் காட்டுஞ் சோதியைத்
திருவுறப் பயந்தன டிறங்கொள் கோசலை.

[ஒருநாள் உலகங்களை யெல்லாம் தனது வயிற்றில் அடக்கிக்கொண்ட அவ்வளவு பெரியவனாயினும் அரிய வேதங்களால் உணர்ந்து கொள்ளப்படாதவனா யிருக்கின்ற அவனை, மைந்நிறக் கருமுகிலின் கொழுந்தினது அழகைக் காட்டும் ஒளியை, திறமை வாய்ந்த கோசலை சர்வமங்களமு முண்டாகும்படி பெற்றனள்.]

பாக்கியத்தில் பெரியளோ கோசலை, திறமையிற் பெரியளோ. புவனம் ஆக்கி மற்றவை அகிலமும் நாளொன்றே தன் வயிற்றடக்கினோனையே இவள் பத்துத் திங்கள் வயிற்றுள் வைத்திருந்த திறமை ஒருபுற மிருக்க, அரிய மறைகளாலும் உணர்வதற் கரிய அப் பரம்பொருளை யாவரும் காணுமாறு ஓர் உருவம் அமைத் தளித்தாளெனின் அன்னாள் திறமை அளவிடற் கொத்ததன்று. செயற்கரிய செய்த பெரியள்.

கோசலாதேவி யீன்றெடுத்த இம்மகவைப் 'பச்சைப் பசுங்குழந்தை' எனல் எல்லாப்படியாலும் தகும். பிறந்தவுடன் அக்குழந்தை இருந்தவோர் அழகை உன்னி அனுபவிப்பதற்குக் "கருமுகிற் கொழுந்தெழில் காட்டும் சோதி" என்பதல்லால் வேறு சில மொழிகள் தவழ்ந்துதவ எங்குள. ஒளியை வெண்மையோடும் அதற்கினமாய பிற நிறங்களோடுமே கலந்தெண்ணப் பழகிய நாம், கருமைக்கு மொளியுளதாத லியலுமெனத் தேருமாறு, கதிரவனொளியைக் கருமைக் களித்துச் சீதைபின் 'கருநாயிறு போல்பவர்' என இராமனை அழைப்பாள். பிறந்தவன்று 'இள இள' வென்றிருக்கும் அக் கருநிறக் குழந்தையைக் கம்பர் முகிலின் கொழுந் தென்பர்.

மகவினினழகு மீன்றோன் திறனும் இவையாயின. அன்னாளுக்குள பாக்கியம் பெரியதே யாயினும் பாற்கடல் துயில்கொள் பண்ணவன் வந்திங்குப் பிறந்தது முற்றிலும் அவள்தன் பாக்கியத்தின் பயனேயன்று. மற்று எதன் பயனாய் எம்பெருமான் வந்து இவள்வயின் அவதரித்தனன் என்பதைப் பின்னாள் விச்வாமித்திர முனிவன் சனகனுக்கு இராமனை யவன் வரலாறு கூறி அறிமுகம் செய்யுங்காலையில்,

விரிந்திடுதீ வினைசெய்த வெவ்வியதீ வினையினாலும்
அருங்கடையின் மறையறைந்த வறஞ்செய்த வறத்தாலும்
இருங்கடகக் கரதலத்திவ் வெழுதரிய திருமேனிக்
கருங்கடலைச் செங்கனிவாய்க் கவுசலையென் பாள்பயந்தாள்.

[பரவிய தீமையே செய்த தீவினைகளின் கொடுமையாலும், எல்லையற்ற வேதங்கள் சொல்லும் அறமே செய்த அறச் செயல்களாலும், பெரிய கடகமணிந்த கையோடுங்கூடிய இந்தச் சித்திரத்திலும் எழுத இயலா அழகிய சரீரத்தையுடைய கடல் போன்ற இராமனைக் கொவ்வைக் கனியனைய சிவந்த வாயினையுடைய கவுசலை என்பவள் பெற்றாள்]

என்று எதிரமர்ந்த இராமனைக்காட்டி அவன் பிறப்புணர்த்தி விளக்குவான். தீமைபுரிபவர் எவராயினும் அவர் கெடுவர். தீமையும் தன்னிலைக் கடங்கித் தீவினை புரியுமாயின் அதன் தொழில் இயற்றுவதாகும். எனினும் அத்தீமைதானும் வரம்பிகந்த மிகுங்கொடுமை செய்ததெனின், தீமைபுரிபவர் கெடுவரெனும் விதிக்கிணங்க, அத்தீமைக்கே அழியும் நாள் வந்ததென வுணரலாம். அன்னவாறு தீவினை தீவினை செய்ததால் அது அழியுமாறு இராமன் பிறந்தான் என்பது இச்செய்யுளின்முதலடிபயக்கும் பொருள். அறம்செய்வார் வளர்வர். அறமே மிக்க அறஞ் செய்துளது. ஆதலின் அது வளர்ந்து செழிப்புடைத்தாதல் வேண்டும். அவ்விதம் அறம் செய்த அறத்தால் அவ்வறம் வளரும் பொருட்டும் இராமன் பிறந்தனன் என்பது இரண்டா மடியின் கருத்து. தான்கெடத் தானே தீவினை தீவினை செய்ததென்றும் தான் நிலைக்கத் தானே அறம் அறஞ் செய்ததென்றும், நினைப்பவர் மனமெலாம் நிறைந்து மணக்கப் பொதுவறப் புனைந்துரைக்கும் திறம் கம்பரிற் கியற்கையா யமைந்துளது. இவ்வண்ணம் அதுவே அதனைச் செய்வதென்றும், அதற்கே அதனையே செய்வித்ததென்றும் தந்திரத்தைத் தன் நூலினுள் இக்கவி பலவிடங்களில் கையாளக் காண்கின்றோம். கொழுநனின் உயிரோடு தனயற்கு மண் வெளவும் ஈரமில்லா நெஞ்சத்துக் கைகேசியைக் கண்டக்கால் 'கோபம்' என்னும் தன்மையே கோபித்துக் கொள்ளும் என, "முனியும் முனியும் செய்கைக் கோடியாள்" * என்பர் கம்பர்.

கைகேசியின்சூழ்ச்சியால்தனதையன் நகர்நீங்கலுறுகின்றதற்குத் தரியாது இலக்குமணன் அன்னையையும் தந்தையையும் பழிபடு வகைகள் கூற இராமன் அவனை ஆற்றுவான்,"விதியின் பிழை. நீ இதற்கு என்னை வெகுண்டது" எனச் சொல்லுங்கால் தம்பி அவனைத் தடுத்து,"விதிக்கு விதியாகும் என்விற்றொழில் காண்டி"என அறை கூவியதும் கம்பரின் முன்சொன்ன தந்திரத்திற் குட்பட்டதே. இராமனை வனத்தின்கண் கண்டு மையல்கொண்ட அரக்கிமகள் சூர்ப்பநகை, அத்துணை அழகுவாய்ந்தவன் தன்னுடல் மெலியத் தவக்கோலந் தாங்கி யிருத்தற்கு ஓர் காரணம் ஆராய்வாளாகி, "ஏதோன் றடைவதற்கும் எண்ணி இவன் தவம் செய்வதற்கில்லை. தவம் என்பது தானே பெருந்தவம் ஆற்றிப் 'பிறர் என்னைச் (தவத்தை) செய்வதால் எனக்குப் பெருமை மிகுதி இன்று. இவ்விராமனே என்னைப் (தவத்தை) புரிதல்வேண்டும்' என்று கடவுளர்பால் பெற்ற வரத்தால், அது நிறைவடையும் வண்ணம், இக்காலம் இவன் மரவுரியும் சடைமுடியுமாய் அத்தவத்தினை மேற்பூண்டுளனோ என்னும் கருத்தில், "இந்நளின நாட்டத்தான் தவஞ்செயத் தவஞ்செய்த தவம் என்" எனவியக்கின்றா ளாயினள்.

* முனி, என்பது இங்கு வசிட்டனைக் குறிப்பதாகக் கொள்வதைக் காட்டிலும் 'கோபம்' என்ற பொருளில் இங்குக் கண்டவாறு கருதுதலே சிறப்புடைத்து. வசிட்டனைய சாந்தகுணமுடையோரும் இவள் செய்கைக்கு முனிந்தனர் எனின் அச்செய்கையின் கொடுமை மிகுந்துளதென்று தெரிவது உண்மையேயெனினும், கோபமே கோபித்துக் கொண்டால் எத்துணைக் கோபம் உக்கிரமாக வேண்டுமோ அத்துணைக்கோபம் வசிட்டர் கொள்ள வேண்டியவராயிருக்க, அவர் கோபங்கொள்ளாது அவளைக் காணவுங் கூசாது, "முகமே முன்னிப்" பேசினார் என்பதால் அவரது நற்குணப் பெருமை விஞ்சுவதாகின்றது.

உலகெலா முய்யும் வண்ணம் உவணத்தூர்தியண்ணல் தம்பியர் மூவரோடும் தாரணியிலவதரித்திட, அயோத்திமா நகருறைதரு பெருந்தகை மாந்தர்,

ஆர்த்தனர் முறைமுறை யன்பி னாலுடல்
போர்த்தன புளகம்வேர் பொடித்த நீணிதி
தூர்த்தன ரெதிரெதிர் சொல்லி னார்க்கெலாந்
தீர்த்தனென் றறிந்ததோ வவர்தஞ் சிந்தையே.

[ஆனந்தத்தால் வரிசை வரிசையாக ஆரவாரஞ்செய்தனர் அன்புபற்றி அவர் உடல் புளகத்தால் போர்த்தன. வேர்வை அரும்பின. எதிர்வந்து இந்நற்செய்தியைச் சொன்னவர்களுக் கெல்லாம் பெரும் பொருள் நல்கினர். பிறந்திருப்பது பெருமான் என்று அவரது உள்ளறிவு ஒருவாறு உணர்ந்திருந்ததோ!]

இத்தகை மாநக ரீரறு நாளும்
சித்தமு றுங்களி யோடு சிறந்தே
தத்தமை யொன்று முணர்ந்தில தாவா
மெய்த்தவ னுமம் விதிப்ப மதித்தான்.

[இவ்விதமாக அப்பெருநகர் மாந்தர் பன்னிரு தினங்கள் தம் மெய்மறந்த தன்மையராய்க் களிமிகும் சிந்தையோடு கழிக்க, அழிவிலா மெய்த்தவம் எய்திய வசிட்டன் குழந்தைகளுக்கு ஏற்ற பெயர் இடுதல் பற்றிச் சிந்திக்கலாயினன்].

மெய்த்தவன் மதித்து விதித்த நாமத்தால் காமெய்தும் பயன் உரைகுறுக நிமிர் பெருமையது. 'ராமன்' என்ற அச்சிறு சொல்லெனும் அணுவினுள் அண்டங்களெல்லாம் விளங்கக் காணலாம். யாருக்கு வசிட்டன் இராமன் எனப் பேர்வைத்தான்?

கராமலை யத்தளர் கைக்கிரி யெய்த்தே
அராவணை யிற்றுயில் வோயென வந்நாள்
விராவி யளித்தருண் மெய்ப்பொரு ளுக்கே
இராம னெனப்பெய ரீய்ந்தன னன்றே.

[முதலையால் அலைப்புண்டு தளர்ந்த துதிக்கையையுடைய மலைபோன்ற கஜேந்திரன் சோர்ந்துபோய்ச், 'சர்ப்பசயனா'வெனக்கூவ அப்பொழுது விரைந்துவந்து அதனைக் காப்பாற்றிய மெய்ப் பொருளிற்குத்தான் 'இராமன்' என்ற பெயரைக் கொடுத்தான்]

இராமநாமத்தின் மகிமையையும், மெய்ப்பொருளிற்கே இப்பெயர் பொருந்தும் சிறப்பையும் உணர்வதற்குக் "கஜேந்திர மோக்ஷத்தின்' உள்ளுறை உவமையைச் சிறிது இங்குச் சிந்தித்துக்கொளல் நலமாம்:—

தேகபலத்தில் மிக்கது யானை. மலைபோன்ற அம்மிருகத்திற்கு வலியதாய துதிக்கையு மொன்றுண்டு. இயற்கையில் யாவரும் உறுதற்குரிய நீர் வேட்கையை அது எய்தியது. தாகம் எய்துவதும் அதைத் தணிக்குமாறு நீர்நிலைமடுவிற் சேர்வதும் தீதன்று. கஜேந்திரன் நீர்த்தடமணுகிப் பருகுங்கால் முதலையொன்று அதன் காலை வந்து பற்றியது.யானையோ முதலில் அதன்பால் தன்கவனத்தைச் செலுத்தவில்லை. இருப்பினும் மெள்ளமெள்ள அம்முதலை யானையை மடுவினை ஆழஆழ இழுக்கலாயிற்று. யானையோ"இதுவென்ன, ஓர்சிறிய சந்து, எனக்கிதுஎம்மாத்திரம்; நல்லவேளை,என்னை இது நீர்இன்னும் அதிகமாக இருக்கின்ற இடத்திற்குத்தானே கொண்டு போகின்றது. குடிப்பது மாத்திர மல்லாமல் அதனில் தோய்ந்து மிருப்பேன்; நீரைப் பருகியபின் அதனை உதறிவிட்டுக் கரையேறிவிடலாம்' எனமதித்தது. இதற்குள் வயிற்றிற்குக் கீழேயும் ஆழ்ந்துவிடப் பயங்கொண்டிலதேனும் முதலையின் பற்றினின்றகலச் சிறிது முயற்சி வேண்டுமென எண்ணி அவ்யானை, மறுகால் கொண்டும் துதிக்கையாலும் விலக்க எத்தனம் செய்தது. விலகிற்றில்லை. இம் முயற்சியினிடையே கழுத்தளவு ஆழமும் அடைந்தாய் விட்டது. "ஓகோ கொ, எளிதல்ல! ஆபத்து வந்துவிடும் போலிருக்கின்றது" என அஞ்சியதாய் அக்குஞ்சரத் தலைவன் முடுகிப் போர் அம்முதலையுடன் முயல்வதாயிற்று. முயன்றுமென்! தன் சுய ஆற்றல் அத்தனையும் செலுத்தி மலைந்தும் பயனற்றுச் சோர்ந்துபோக நீரும் வாயளவு வந்து விடவே இனித் தன்னாற் றன்னைக் காக்க வியலாதெனத் தேர்ந்தோ,உள்ளுணர்வு (Subjective Consciousness) மீக்கொண்டோ, 'ஆதிமூலமே' வென அழைப்ப நீலக்கிரி போல் எழுந்தருளி எம்பெருமான் அதனிடர் தீர்த்துக் கரை யேற்றினான்.

எம்பெருமான் புரிந்துள செயல்கள் எத்தனை எத்தனையோ பிற இருப்பினும் மெய்த்தவ முனிவர வசிட்டன் இந்த வொரு செயலையே இங்குக் குறிப்பிற் சிறப்பித்து அச்செயல் செய்தவொரு பொருளிற்கே இராமனென் எனப் பெயர் ஈந்தனன் என்னின் அதன் காரணம் சிந்தித்தற் கொத்தது.

யானையே மனிதன். அவனடைந்த இல்வாழ்க்கையும் மடுவாம். மனைவியென்றும் மக்களென்றும் மற்றுள பொருள்களென்றும் உற்றதோர் ஆசையால் சம்சாரத்தில் இறங்குகின்றான். இவ்வேட்கை இயற்கையினின்று பிறழ்ந்ததன்று. அந்நெறியில் தீது ஒன்றுமில்லை. எனினும் ஆசையென்பது உற்றகாலையில் அது எந்நாளும் எல்லைக்குள்ளேயே அடங்கி இருத்தல் அருமை. இயற்கைக்கு விரோதமான ஆசைகளாக அவனது இந்திரியங்கள் வந்து பற்றுகின்றன. அவைதாம் முதலை. இக்கருத்தை முன் அயோத்தியின் அகழிவருணனையில், "நன்னெறி விலக்கும் பொறியென எறியும் கராத்தது" எனக் கம்பர் காட்டி யிருக்கின்றார். முதலில் அவன் இந்திரியங்களைக் கவனிப்பதில்லை. ஆனால் அவை இழுக்கவும் தலைப்படுகின்றன. அவை இழுத்தவழி செல்லுங்கால் ஆசைக்குள் ஆழ்ந்து ஆழ்ந்து அவனுக்கு அதனால் இன்பமும் அதிகமாவதுபோல் தோன்றுகின்றது. "என் புலன்கள் செய் உதவியால் பின்னும் யான் இன்பத்தில் தோய்ந்திருப்பேன்" எனக்களிக்கும் தருணமிது. ஆனால் ஆசையுள் ஆழ ஆழச் சிறிது சிறிதாய்த் துன்பமும் விளைவது தெரியவே, புலன்வழிச் செல்வதால் இன்பங்களும் துன்பமாய் மாறுவது உணர்ந்தானேனும் பற்றற உதறிக் கரையேற இன்னும் நினைத்தானல்லன். "எனக்கென்ன கல்வியில்லையோ, ஆற்றலில்லையோ, அறிவில்லையோ, புத்தியின் திடமில்லையோ. வேணுமெனின் வேண்டும். இல்லை யெனில் இல்லை. எனது இட்டம் போமளவு பொறியொடு போவேன். வேண்டாக்கால் வந்தும் விடுவேன்" எனவீரம் பேசுஞ் சமயம் இது. பின்னுஞ் சிலகாலஞ் செலச்செல முன்னினும் மிகுந்த துன்பமே மூளமூள 'இனி இப்பற்றெலாம் அறவே ஒழித்தல் வேண்டு'மெனப் புலன்களோடு போராடப் புகுகின்றனன். வெல்வர் யாரெனப் புகலவும் வேண்டுமோ. 'சம்சாரம் சாகரந் துக்கம்' என்று சொல்லிக்கொண்டு சோர்ந்துபோகின்றான். "ஐயோ, என் கதி இதுவோ!"எனக் கையற்றுக் கடையாய காலத்திலேனும், "என்செயலால் ஆவது யாதொன்றும் இல்லை, இனித் தெய்வமே!" என அவனை அழைப்பானாயின்' அன்றே உய்ந்தனன். மற்றப்பற்றினை விடுதற்கு அவன் காலினைப் பற்றல் வேண்டும்.

ஆன்மகோடிகளுக்கு அருமைத்தாயாய் வந்து ஆதரிக்கும் திருமாலின் அருளைக்காட்டும் நலத்தினால், கஜேந்திரனை அளித்த அப் பரம்பொருள் என்பதைக் கம்பர் இங்குக் கருத்துட் கொண்டனர். 'ஆதிமூலமே,' என்றும் "வேதமுதலே" என்றும் கஜேந்திரன் அழைத்ததாக வில்லிபுத்தூரார் புகழேந்தி பிள்ளைபெருமான் ஐயங்கார் முலிய புலவர்கள் சொல்வர். கம்பர் காதிற்கோ,"அராஅணையில் துயில்வோய்" என்று அது கூப்பிட்டதாகக்கேட்டது வியக்கத்தக்கதே. "ஏ தூங்குமூஞ்சிக் கடவுளே, யான் படும்பாடு காணாது துயில்தல் நீதியோ" என வைதேனும் உன் உதவிக் கழைத்திடு, வந்திடுவர், எனக் குறிப்புணர்த்துகின்றனர். அவர் புரியுந்துயில், யார் தன்னை எக்காலம் கூப்பிடுவார்கொல்என அக்கூப்பிடு குரலின்மேல் செவிவைத் திருக்கின்ற அறிதுயிலேயாகும். வைதாலும்தன்னை வாராதமையார். கண்டாகர்னனுக்கு வைகுண்டபதவி நல்கிய அவர் பிறக்கு.

எது செய்யார். வைதற்கேனும் தன்னை யொருவன் நினைத்தாற்போதும். நினைத்து இனி 'என்னால் இயலாது' என்று பொறுப்பைத் தன்மேல் சுமத்துவானாயின் எற்பதற்கு எவ்வளவுந் தாழாது விராவி அளித்தருள் கொள்கையது அத் தனிப் பரம்பொருள்.

அப்படி அளித்தருள்கின்ற பொருள் எதுவெனின், அதுதான் மெய் மெய்யென்பது நிரந்தரமாய் உலகிற்கு உயிர்நிலையாய சத்தியம். அந்தச் சத்தியத்திற்கே வசிட்டன் இராமன் எனப் பெயரிட்டான். இராமன் என்றதற்கு அழகினால் இரமிக்கச் செய்பவன் என்பது பொருளென யாவரும் அறிவர். ஆயின், இச்செய்யுளின் அமைப்பு ஆராயுங்கால், அருள்கின்ற மெய்ப்பொருளுக்கு இராமன் என்ற பெயர் வந்த பெருமை எளிதில் விளங்கும். அருள் மெய் அழகு என மூன்று செய்திகள் இதில் அடங்கி இருக்கின்றன. 'விராவி அளித்தருள் மெய்ப்பொருளுக்கே இராமன் எனப் பெயர் ஈந்தனன்' என வரும் தொடரின் அமைப்பாலும் பிரிநிலையோடு தேற்றமுங் கலந்த ஏகாரத்தின் பொருளாலும், மெய் என்பதுதான் அழகு, அவை இரண்டும் வேறல்லவென்பது கம்பருக்குத் தெரிந்த வாய்மை. அதுமாத்திரமோ, மெய்மை என்பதும் விராவி அளிக்கின்ற அவ்வருளேதான் ஆகும். ஆதலின் அருள் என்பதும் மெய் என்பதும் அழகு என்பதும் ஆகிய இம்மூன்றும் ஒன்றேயாம்.

இக்கருத்திற்கு இணையாக, "None can be called deformed but the unkind. Virtue is Beauty" என ஷேக்ஸ்பியர் கூறியிருப்பதை இனிதின் ஒப்பு நோக்கலாம். பாஷை எதுவாயினும் உண்மையாம் கலையொளி விளக்கும் மனத்தராய புலவோர் மாறுபாடக் காணார்.

மனதால் ஊகித்து எய்துங்கால் அவ்வொரே தத்துவத்தை மெய் என்றும், புலன்களால் அனுபவித்து மனதோடு சேர்க்குங்கால் அழகென்றும், செய்கையால் தோற்றுவிக்கும்போது அருள் என்றும் வேறு வேறு தன்மையில் அழைக்கின்றோம். பெயர்களாய்க் கருதும்போது இவ்வாறு. இனி இவைகளை வினைகளாக மதிக்கும்போதும் அம்முடிவே எய்துபவராவோம். ஆபத்தில் வந்து உதவக்கூடியது மெய் என்பது ஒன்றே யன்றிப் பிறிதொன்றில்லை. நமது ஆற்றலும், வேறு சாதனங்களும் இடம் பொருள் ஏவல்களின் மிகுதியும், சக்தியும் சாமர்த்தியமும் பயன்படா. அம்மெய் எதனைச்செய்வது எனின் அழகைச் செய்வது. கடைமுறையை நோக்கினும், அழகு செய்வதும் அருள், அருள் செய்வதும் அழகு, இவ்விரண்டிற்கும் இடைநின்ற மெய் இரண்டினையும் செய்யும்.

இச்செய்யுளின்கண் வந்துள மெய்ப்பொருளுக்கே என்னும் சொல்லிலிருக்கின்ற ஏகாரத்தில் இவ்வளவு விரிந்த வாய்மை அடங்கியிருக்கின்றது. எய்த்தே, அன்றே என்ற வேறு இரண்டு பதங்களிலுள்ள ஏகாரங்களில் முன்னது யானையின் கதியைக் கண்டு இரங்குவதையும், பின்னது மெய்த்தவனது அஃகிய அறிவைக் கண்டு வியப்பதையும் குறிக்கின்றன. கம்பரின் கவித்திறத்தைப் புகழ்வதோடமையாது அவரது கருத்துக்களையும் ஆழ முகந்து அருந்துபவர் உய்வர்.

தயரதன் புதலவருள் முதல்வனுக்கு இவ்வாறு எவ்விதத்திலு மேற்றவொரு பேர்வைத்த வசிட்டன், அவன் தம்பிக்கோ எள்ளளவும் பொருந்தாப் பெயரிட்டுத் தவறினான் என்று இரங்குவார்போல், வருவதுணர்ந்த கம்பர், பரதனின் மகிமையை மகிழ்ந்து இப்பொழுதே கூறுவார். "பாவம், இவனுக்குப்போய்ப் பரதன் என்று பேர் கட்டினனே, என்ன பரிதாபம்!" என்னும் குரலில் 'பரதன் எனப் பெயர் பன்னினன் அன்றே' என அடுத்த செய்யுள் முடிகின்றது. எனிவ்வாறு இரங்கவேண்டுமெனின்,

> காதல முற்றெரளிர் நெல்லி கடுப்ப
> விரத மறைப்பொருண் மெய்நெறி கண்ட
> வரத னுதித்திட மற்றைய வொளியைப்
> பரத னெனப்பெயர் பன்னின னன்றே.

[அநுஷ்டானத்திற் காதாரமாய வேதப்பொருளின் நிசமான மார்க்கத்தை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் உணர்ந்தறிந்த வரதன் பிறந்திருக்க, அந்தச் சோதிக்குப் பரதன் என்று பெயர் சந்தேகத்துடனே சொன்னானல்லவா !]

வரதன் எனின் கொடுப்பவன். பரதன் எனின் தாங்குபவன். வாஸ்தவத்தில் இவனுக்கோ வரதன் எனப் பெயரிட்டிருக்கவேண்டும். அதைவிட்டு அவனுக்குப் 'பரதன்' என்று பெயரிட்டானே, என்பது கம்பரின் வருத்தம். ஏனெனில் இராமன் இவனுக்குப் பின்னால் நாட்டைக் கொடுத்துவிட்டுப் போனது பெரியகாரியமல்ல. நாட்டின்மேல் ஆசையால் போக மனமில்லாதவனா யிருந்தாலும் தாய்தந்தையர் சொல் மறுக்க மாட்டாமலும், அவ்வாறு மறுப்பின் ஊராரும் உயர்ந்தோரும் தன்னை வெறுப்பரோவென அஞ்சியும், இராமன், தடுக்க இயலாததைத் தாங்குவதே முறை என்னுந் தந்திரத்தால், அரசைப் பரதனை விட்டகன்றிருப்பினும் இருக்கலாம். எவ்வாறாயினும் அவன் பரதனுக்கு நாட்டைத் தானாகக் கொடுத்திலன். பரதனோ, தாயரும் மந்திரக் கிழவரும் மற்றுளோரும் அரசை ஆள்வதே முறையென வேண்டினும், வேண்டாது சென்று இருக்குமிடந் தேடி இராமனுக்கு அளித்தானாதலின், இராமன் பரதனுக்கு நாட்டை விட்டகன்றதினும் பரதன் மீண்டவனுக்கு அளித்ததே கொடைச்சிறப்பு மிகுதியுங்கொண்ட செய்கை. எனின் வரதன் (கொடுப்பவன்) என அவனுக்குப் பேரிட்டழைப்பதே பொருத்தமாகு மென்பதையோராது வசிட்டன் பரதன் (தாங்குபவன்) என்றோர் அபவாதம் கற்பித்தால் இரங்காரோ கம்பர். வசிட்டனிற்கும் இது பொருந்தாதெனும் சந்தேகம் இருந்ததெனக் காட்டுவார்போல் 'பன்னினன்' என்பர். பன்னுதல் என்பதற்கு, 'ஏன் பன்னிப் பன்னிப் பேசுகின்றாய்' என்ற வழக்கத்தில் காண்பதுபோல், 'இழுத்து இழுத்துப்' பேசுதல் என்னும் பொருள் உளது. அன்றே என்பதிலுள்ள ஏகாரம், 'கண்ணிழந்தானே அவன்' என்பதுபோல் இரக்கப் பொருளது. 'அன்றே' என்பதில் சிறிது வியப்புந் தோன்றுகின்றது. மற்றைய, என்பது வினைமாற்று அல்லது பிறிது எனும் பொருளில் வந்து வரதன் என்பதை இராமன் என்றும், ஒளியைப் பரதனோடும் வேறு பிரித்துவைத்தது என்றெண்ண இடமில்லை. மற்றை, என்பது அசைநிலை மற்று எனும் இடைச்சொல் இறுதிவிகாரமாய் நின்றது. அ, சுட்டு. அது யகர உடம்படுமெய் பெற்று ய, வென ஆயிற்று. வரதனெனப் படவேண்டிய தம்பி பிறந்திருக்க அந்தச் சோதியையோ பரதனென்று கூறினான் என இணைத்தல்வேண்டும். இவ்வாறன்றி 'வரதன்' என்ற சொல் இராமனைக் குறிப்பதாகக் கொள்வது இயலாது. அருமறைக் குணர்வரியவனாய், நான்மறைக் கெட்டாதவனாய் வேதங்கள் தேடியும் அகப்படாதவனாய்க் கருதப்படுமவனை, வேதத்தின் பொருளை உள்ளங்கை நெல்லிக் கனிபோல் கண்டவன் என்பது பெருமையாகுமோ! மறைகளால் இவனை அணுகவும் ஒண்ணாதிருக்க இவன் அவைகளை நன்றாய்க்கற்றவன் என்பது மேலிருந்தவனைக் கீழுருட்டுவதாகும். ஆங்கிலத்தில் இதனை 'Bathos' என்பர். அல்லாமலும் இராமன் பிறக்க வேறு ஒளிக்குப் பரதன் என்று பேரிட்டான் என்றால் செய்யுளின் இயைபும் இயற்கையாயில்லை. வரதன் என்றது வசிட்டனைக் குறிப்பதாகக் கொள்வதற்கு அர்த்தமேனும் அந்வயமேனும் இடந்தரா.

வகாரத்திற்கும் பகாரத்திற்கும் வடமொழிஇலக்கணத்தில் வபயோரபேதம் இல்லையேனும் தமிழில் அவைகளை வ ப என்றே எழுதுவதால் வரதனே பேதமில்லாமல் பரதனாயினனே எனக் கம்பர் விளையாட்டாய்ச் சொல்வதுபோல் இச்செய்யுள் தொனிக்கின்றது.

T. N. சேஷாசலம்.

A MOMENTOUS BOOK

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM

OF

CEYLON CIVIL SERVICE

WITH AN APPRECIATIVE

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M. A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidentaly in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit.

Price Rs. 5-8-0. (V.P. Charges extra)

MANAGER:—

"KALANILAYAM"

11, VELLALA STREET.

Purasawalkam, MADRAS.

சுகாமிர்தம்.

வக்கீல்கள், மாணவர்கள், உபாத்தியாயர்கள், கிளார்க்குமார் போன்ற மூளைவேலை செய்கின்றவர்களும் பிற நோய்களால் வருத்தப்படுபவர்களும் ரஸாயன ஔஷதங்களைச் சாப்பிடத்தேவையில்லை. மிகவும் இன்றியமையாத ஔஷதம் இது. பல மூலிகைகளைக்கொண்டும், அயம், காந்தம் இவைகளைக்கொண்டும் செய்யப்பட்டுள்ளது.

1-புட்டி 48-வேளை மருந்து ரூபா 3 0 0

கீழ்காணும் விலாசத்திற்கு எழுதிப் பெற்றுக் கொள்ளவும்.

Bhishakwara,

A. KANAKARATNAM A. M. A. C.

Late Hony. Medical Officer & Anatomy Assistant,

Govt. School of Indian Medicine.

Ayurvedalayam,

1/24 *Arunachala Naick St., Chintadripet, Madras.*

ஆநந்த குணபோதினி

மூன்றும் வருடம்

இது போன்ற நவீன மாதாந்த சஞ்சிகை இது வரை வெளிவந்ததில்லை. இது சிறந்த வழியில் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிகை. 5000 சந்தாதாரர்கள்.

வருட சந்தா ரூ. 1. வெளிநாடு ரூ. 1-4.

"ஆநந்த குணபோதினி" ஆபீஸ்,

302, தங்கசாலை வீதி, சென்னை.

9-ம் பதிப்பு! 9-ம் பதிப்பு!!

வெளி வந்துவிட்டது

ஆங்கில ஆசான்

தமிழ் நாட்டில் சுமார் இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொடுத்ததும், மூதன் முதல் வெளிவந்ததும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் இதுவே. எமது இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட் மார்க் இருக்கிறதாவென்று கவனித்துப் புத்தகம் வாங்குங்கள்.

800-பக்கம்

முழு காலிகோ பயிண்டு

விலை ரூ. 2-0-0.

தபால் சார்ஜ் பிரத்யேகம்

தி. இராஜகோபால் முதலியார்,

302, தங்கசாலைத் தெரு, சென்னை.

கம்பராமாயணம்
பாலகாண்டம்

T.N. சேஷாசல ஐயர், B A.,B L., பதிப்பு.

சிற்றடக்கமாய் நல்ல கட்டிடத்தில் புதிய முறையில் பொருள்விளக்கி இப்பதிப்புப் பதிப்பிக்கப் பெற்றுளது. செய்யுள்களுக்குப் பதவுரை எழுதிவிட்டால் படிப்பவர் தம் முயற்சியால் பொருள்தேடும் பழக்கம் பெறாது போய்விடுவர். ஆதலால் இப்பதிப்பாசிரியர் பதம் பிரித்துத் தொடர்விரித்து அன்வயப் படுத்தி அவாய் நிலைகளை வருவித்து, அரும் பதங்களுக்கு அர்த்தம்கூறி விசேஷக் குறிப்புக்களையுஞ் சேர்த்துக் கூடியவரையில் கம்பருடைய வார்த்தைகளாலேயே அவர் செய்யுளின் கருத்தை விளக்குகின்றார்.

இப்பதிப்பில் பற்பல செய்யுள்களுக்கு இவ்வாசிரியர் காட்டும் பொருள் புதியன. இவர் செப்பும் உரையாவும் கவியின் இருதயத்தைத் தழுவி எழுதியன.

விலை ரூ. 3 0 0
(வி. பி. சார்ஜ் வேறு)

மானேஜர்,
"கலாநிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைபாக்கம்,
சென்னை.

ஏமாங்கதத்
திளவரசன்

T. N. சேஷாசலம், B.A.B.L., இயற்றியது.

இலக்கிய நலங்கள் யாவும் துளங்குமோர் இன்னியற் காதல் காதை. அன்பினது வன்மையும், வாய்மையின் தூய்மையும், புன்கவி புகுந்துசெய்யும் துன்மதிச் சூழ்ச்சியும் கலந்து இக்கதையினை நடத்தி வைக்கின்றன.

தமிழின் உரைநடைக்கும் ஓர் தனிச்சுவை உளதென்பதை இந்நூலினுள் காணலாம். ஆங்கிலக் கதைவல்ல ஆசிரியர்களின் நூலினுள் தோன்றும் சம்பாஷணை நயத்தைத் தமிழில் தன்னுள் ஏற்ற நூல் இதுபோன் றிருப்பன வெகு சில.

விலை ரூ. 1 0 0
(வி. பி. சார்ஜ் வேறு.)

மானேஜர்,
"கலாநிலயம்"
11, வெள்ளாளர் தெரு,
புரசைவாக்கம்,
சென்னை.

KAMBAN'S KOSALA
or
A Poet's Plea for Culture
by T. N. Seshachalam B A., B L., In English

A Succinct exposition of the Poetic Art and the Political Philosophy of Kambar as can be gleaned out of the First Four Padalams of Balakandam.

With a Foreword by Dr. James H. COUSINS

This book is an excellant commentry on the great truth that the art of literature is something of an abstraction, an idealisation that purposely leaves the realities aside. The scope and the purpose of the book will be clear from the author's preface which is quoted below :—

THIS little book is ambitious. Taken by itself it hopes to interpret an ancient seer-poet's judgment on the conflict that is now rampant on all sides between conservative harangues and socialistic utopias. But its main purpose is to introduce to the world of thought and letters, the great Kamba Ramayanam, an extraordinary work of art and book on life, but which would without elucidation be perplexing to all the western methods of analysis and reasoning.

About Kamban, as with many other great personalities, much is not known beyond his works. He lived nearly ten centuries ago and was accepted as the greatest among the poets of his time. The Ramayana which he composed has not been surpassed by anything in the epic literature of the Tamil land. The magnificient classics of the earlier academicians were all his heritage, and his imagination and native genius were considerably assisted by his scholarship. The hoary literatures and philosophy of India alone could have cradled such a genuis, a genius highly poetical, pre-eminently moral, transcendental by the inspired revelations of its seer's ecstasy and best formed to clarify the elemental Truths of life here and hereafter.

Kamban professes Valmiki's Sanskrit epic of the same name as the original for his Ramayanam. But this is almost akin to Shakespeare's indebtedness to Boccacio or Plutarch. Kamban's Ramayanam is the embodiment of a mind, the most creative that ever engaged in the exact portrayal of the details of actual existence, in the dazzling speculations of life among the gods and in the profound complications of passions, human and superhuman. The eternal story of Rama runs in crystal stream of fortytwo thousand three hundred and forty eight lines of sublime grandeur glorifying the Creator and reflecting His creation.

With the Kural and the Gita, the Ramayanam is the most ennobling book that has ever been written. Like many other good things, however, it is not generally understood and made sufficient part of one's being The realization of the conception of life, individual and social, that gathers and takes shape in one's mind as this wonderful epic is read and re-read ought to recast the destiny of mankind. Price Re. 1-4-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*" 11, Vellala St., Purasawalkum, Madras.

வர்த்தமானம்

சர்வதேசத் தந்தி இலாக்கா மஹாநாடு:—1928-ம் வருஷத்துச் சர்வதேசத் தந்தி இலாக்கா மஹாநாடு, செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் ஐரோப்பாவிலுள்ள பிராவிஸ் என்னும் நகரத்தில் கூடும் என்றும், உலகத்திலுள்ள பலநாடுகளும் பிரதிநிதிகளை அனுப்பும் என்றும் தெரிகிறது.

***

புயலால் சேதம்:— திருவனந்த புரத்தைச்சேர்ந்த கொல்லம் தாலுக்காவிலுள்ள நெடும்பனை என்னும் கிராமத்தில் சிலதினங்களுக்குமுன் அடித்தபுயற்காற்றால் பள்ளிக்கட்டிடம் ஒன்று கீழே விழுந்தது. நாலு மாணவர் இறந்துபோயினர். பலருக்குக் காயம் ஏற்பட்டது என்று திருவனந்தபுரச் செய்தி கூறுகிறது.

***

கமிஷனர் அறிக்கை:—சென்னைப் போலீஸ் கமிஷனர் அவர்கள் டிராம் வண்டியின் படிகளில் பிரயாணி நிற்கலாகாதென்றும் வண்டி ஓடிக்கொண்டிருக்கையில் யாரும் இறங்கவும், ஏறவும் கூடாதென்றும், இதற்கு விரோதமாய்ச் செய்பவர்களுக்கு 10 ரூபாய் அபதாரம் விதிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்.

***

ஸ்டேட்ஸ்மென் ஆதரவு:—கல்கத்தாவில் நடைபெறும் 'ஸ்டேட்ஸ்மென்' என்னும் ஐரோப்பியப் பத்திரிகை இந்தியாவின் ஆங்கில அரசாட்சி முறையைப்பற்றிக் கூறுவதாவது:— ஆயுத பலத்தால் வெள்ளை நிறமுடைய மனிதன் கீழ் நாடுகளை அடக்கியாள்வதால், ஆளும் ஜாதியார்மேல் வெறுப்பு ஏற்பட்டுள்ளது. அவ்வெறுப்பைத் தணிக்க வல்லது அன்பேயாகும். விடுதலைத் தாகம் பெற்ற ஜனங்களைப் பழய முறைகொண்டு அடக்குவது என்பது அறியாமை. நமது முறை மாறவேண்டும்.

***

பூகம்பம்: —கிரேக்கர் நாட்டின் தலை நகரான ஏதன்ஸ் என்னுமிடத்தினின்று வந்த தந்தி கூறுவதாவது: —காரிந்து என்னுமிடத்தில் கடுமையான பூகம்பம் ஏற்பட்டது. பல வீடுகள் இடிந்துபோயின. சென்ற ஏப்பிரல் கடைசியில் ஏற்பட்ட அதிர்ச்சியால் சிறிது பழுதான வீடுகள் அனைத்தும் இம்முறை இடிந்துபோயின. ஏழைகள் பலர் வீடில்லாது தவிக்கின்றனர். ஆகாயத்தில் புகைசூழ்ந்து வருவதால் எங்கேயோ எரி மலையும் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று ஜனங்கள் நினைத்துத் திகில் அடைந்துள்ளார்.

***

மலையாளக் குடிவார மசோதா: —மலையாளக் குடிவார மசோதா விஷயமாய் ஒருமுடிவு செய்யச் சென்னை அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட கமிட்டியார் வெளியிட்ட அறிக்கை மலையாள பொது ஜனங்களுக்குத் திருப்தியை அளிக்கவில்லை என்று தெரிகிறது. இவ்வறிக்கையைக் கண்டித்துப் பேசுங்காலை ஸ்ரீமான் பி. ராமமேனன், குடியானவர்களுக்கும், ஜென்மிகளுக்கும் ஏற்பட்டுள்ள போராட்டம், இந்திய மக்களுக்கும், பிரிட்டிஷ் அரசாங்கத்திற்கும் நடக்கும் போராட்டத்தைப் போன்றது என்றும் குடியானவர்கள் பின்வாங்காது தங்களது உரிமையைப்பெற முயல வேண்டுமென்றும் கூறியுள்ளார்.

***

ஐக்கியமாகாண மந்திரிகள் ராஜிநாமா:—ஐக்கிய மாகாண மந்திரிகளுக்கும், கவர்னருக்கும் சைமன் கமிஷன் விஷயமாய் அபிப்பிராய பேதமிருந்து வந்ததென்றும், கல்வி இலாக்கா மந்திரியான ஸ்ரீமான் ராய் ராஜேஸ்வர் என்பவரும், விவசாய இலாகாத் தலைவரான ஸ்ரீமான் தாக்கூர் ராஜேந்திரசிங் என்பவரும் சைமன் கமிஷன் பகிஷ்காரக் கட்சியைச் சேர்ந்திருந்தமையால், தங்கள் பதவியை விடாதிருக்கக் கூடாது போனதென்றும், கடைசியாக இருவரும் ராஜிநாமா செய்து விட்டனரென்றும் தெரியவருகிறது. இவர்கள் ராஜிநாமாவைக் கவர்னர் ஏற்றுவிட்டதாக ஒரு தந்திச் செய்தி கூறுகிறது.

பர்தோலி சத்தியாக்கிரஹத் தொண்டர்களுக்குத் தண்டனை:—பர்த்தோலியிலிருந்து வந்த ஒரு தந்திச் செய்தி கூறுகிறது :—

சென்றவாரம் பர்தோலி சத்தியாக்கிரஹக் கமிட்டித் தொண்டர்களில்மூவர் போலீசாரால்கைதுசெய்யப்பட்டு ஜில்லாமாஜிஸ்டிரேட்டாரால் விசாரிக்கப்பட்டனர். கடைசியாக மாஜிஸ்டிரேட் குற்றவாளிகளுக்கு ரூ. 50 அபராதமும், அபராதம் கொடுக்கத் தவறினால் இரண்டு மாதக் காவல் தண்டனையும் விதித்தார். குற்றவாளிகள் மூவரும் சூரத்கலெக்டர் பர்தோலியி லிருக்கையில் அவர் தங்கியிருந்த பங்களாவில் நின்றுகொண்டு தொந்திரவு கொடுத்தனர் என்பதே குற்றம். மூவரும் அபராதம் கொடுக்க மறுத்தலால் சிறைச்சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர்.

***

இந்திய அரசாங்க கெஸட்: —இந்தியச் சட்டசபை அங்கத்தினரான ஸ்ரீமான் பாண்டுரங்கராவ், தமது அங்கத்தினர் பதவியை விடுத்து விட்டார்.

இராஜாங்கசபை அங்கத்தினரான ராய்நளினநாத் சேட்பஹதூர் இறந்ததால் ஏற்பட்டகாலிஸ்தானத்திற்கு, ஜூலை 31-ந்தேதி அன்று தேர்தல் நடக்கும்.

சைமன் கமிஷனுக்குக் கல்வி விஷயமான விசாரணையில் துணைசெய்யும் பொருட்டு இந்திய அரசாங்கத்தாரால் நியமிக்கப்பட்ட யோசனைக் கமிட்டியில் காரியதரிசி வேலையை ஸ்டிராத்தம் துரை ஏற்றுக் கொண்டார்.

பரோடா சமஸ்தான விவசாய இலக்காத் தலைவரான ஸ்ரீமான் சென் பம்பாயிலுள்ள இந்திய மத்தியப் பருத்திக்கமிட்டியில், பரோடா சமஸ்தானப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

***

காங்கிரஸ் கட்சியார் கூட்டம்:—இம்மாதம் 11-ந் தேதி மாலை, கோக்கலே மண்டபத்தில் காங்கிரஸ் கட்சியினர் கூட்டமொன்று ஸ்ரீமான் முத்துரங்க முதலியார் தலைமையில்கூடிற்று. தலைவர் கூறியதாவது:—"சைமன் பகிஷ்காரத்தைபற்றி நாம் கூடிய ஒரு கூட்டத்திற்குப் பிறகு நாட்டின் நிலைமையில் பல மாறுதல்கள் ஏற்பட்டுளது. அரசாங்கத்தார் நம்மில் சிலரது பலஹீனத்தையும், வேறு சிலரின் துரோகத்தையும் ஆதாரமாகக் கொண்டு பகிஷ்கார இயக்கத்தை முறிக்க முயல்கின்றனர். ஜஸ்டிஸ் கட்சியினரோ அரசாங்கத்தாருடன் சேர்ந்து கொள்வார்கள் போலிருக்கிறது. வட நாட்டில் கண்டிரி லீக் (Country league) என்ற ஒரு இயக்கம் கிளம்பிச் சைமன் கமிஷன் பகிஷ்காரத்துக்கு விரோதமாய் வேலை செய்யத் துவக்கி யுள்ளது. சட்ட சபையில் கமிஷன் பகிஷ்காரத்திற்கு ஆதரவு தந்த முத்துலக்ஷ்மியம்மாளும் இப்போது கமிஷனுக்குக் கல்விவிஷயமான விசாரணையில் யோசனைகூற வென்று நியமனமான கமிட்டியில் ஸ்தானம் பெற்றுளார். இந்நிலையில் நமது நாடு இருந்து வருகிறது. எனவே பொது ஜனங்கள் பகிஷ்கார வேலையை நடத்தி நாட்டின் சுய மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும்."

பின்னர் ஸ்ரீமான்களான ஓ. கந்தசாமி செட்டியார், எஸ். சத்தியமூர்த்தி ஐயர், குழந்தை முதலிய பலர் பேசக் கூட்டம் கலைந்தது.

189007

***

பர்தோலி தினம்:—இம்மாதம் 12-ந்தேதி மாலை 5-30-க்குச் சென்னைக் கடற் கரையில் பர்தோலி தினக் கூட்டம் கூடியது. ஆயிரக் கணக்கான ஜனங்கள் வந்து கூடியிருந்தனர். காங்கிரஸ் காரர்கள் பர்தோலி சனங்களின் தைரியத்தை மெச்சியும் அதிகாரிகளின் செயல்களைக் கண்டித்தும் பேசிக் கடைசியில் பொதுஜனங்கள் பண உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டனர். கூட்டத்திலேயே பலர் பொருளுதவி செய்தனர். இரவு 8 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

THOUGHTS FOR STATESMEN

from

MONTESQUIEU AND TOCQUEVILLE

IN ENGLISH

by

T. N. SESHACHALAM B.A., B.L.

WITH A FOREWORD

by

Sriman S. Sreenivasa Aiyangar

The purpose and Scope of the book is well set out in the opening paragraph of the author's preface which is quoted below:—

The course of history may vary in some details with different countries and at different periods, but human nature, the fundamental spring of all actions remains constant and shows a remarkable uniformity throughout. A proper understanding of that phase of human nature which specially manifests itself in the carrying on of a corporate existence should be an invaluable equipment to those who are engaged in the making or the maintaining of a nation. Philosophical historians have attempted to find the common principles and emotions which, operating upon men of every climate and degree of civilization, produce certain results. With their keen powers of observation and insight they gather a comprehensive view of our society, institutions and destiny. An attempt is made to collect in this book some of the very important observations made and far-reaching results arrived at by two notable French writers of eminence and perhaps not very well known to an ordinary English reader.

It is needless to add that the selection of these passages has been made with an eye to their applicability to the present conditions in India.

Price Re. 1-8-0. (V. P. Charges extra.)

Apply to the Manager, "*KALANILAYAM*"
11, Vellala Street, Purasawalkum, Madras.

Dr. Orison Swett Marden's
World-Famous Inspirational Books

(8)

TEACH AND TRAIN YOU

To discover what career you are best fitted for; To succeed in your chosen calling; To overcome shyness, timidity, fear, vacillation and lack of confidence; To be healthy, happy and successful.

GETTING ON

CONTENTS:—The Precedent Breaker—No Chance—Your fortune is in yourself—A cheery disposition—How to be popular?—Physical vigour and achievement—Burn your bridges behind you—Emergencies, the test of ability—Go into business for yourself—The stimulus of rebuffs—Gentleness *versus* Bluster—The miracle of polite persistency—Clear grit did it—System in business—The tragedy of carelessness—Put new blood into your business—A vacation as an investment—Time tossers—Diverted by salary—Mere money-making is not success.

RISING IN THE WORLD

CONTENTS:—Wanted a man—Dare—The will and the way—Uses of obstacles—One unwavering aim—Self-help—Clear grit—Rich without money—Opportunities where you are—The might of little things—Nature's little bill—Choosing a vocation—The man with an idea—Decision—The curse of Idleness.

SELF-INVESTMENT

CONTENTS:—If you can talk well—Enjoying what others own—Personality as a success asset—How to be a social success—The miracle of Tact—Ambition—Education by reading—Reading a spur to ambition—The self-improvement habit—The raising of values—Public speaking—Self-reliance.

HE CAN WHO THINKS HE CAN

CONTENTS:—He can who thinks he can—Getting aroused—Education by absorption—Freedom at any cost—What the world owes to dreamers—Responsibility develops power—An over-mastering purpose—Has your vocation your unqualified approval?—Happy, if not, why not?—Sizing up people—What has luck done for you?—Success with a flaw—Getting away from Poverty.

PEACE, POWER AND PLENTY

CONTENTS:—The power of the mind to compel the body—Poverty, a mental disability—The law of opulence—Health-building during sleep—Health through right thinking—Mental chemistry—Imagination and health—How suggestion influences health—Why grow old?—The miracle of self-confidence—Destructive suggestion—Worry, the disease of the age—Fear, the curse of the race—Self-control—Good cheer, God's medicine.

EVERY MAN A KING

CONTENTS:—Steering thought prevents life-wrecks—How mind rules the body—Thought, cause of health and disease—Killing emotions—Mastering our moods—Cheerful thinking—Negative creeds paralyse—Affirmation creates power—Thoughts radiate as influence—How thinking brings success?—Power of self-faith—Building character—Strengthening deficient faculties—The power of imagination—The coming man.

THE SECRET OF ACHIEVEMENT

CONTENTS:—Moral sunshine—"Blessed be drudgery"—Honesty, as Principle and as Policy—Habit the servant, the master—Trifles—Courage—Self-control—The School of Life—Being and Seeming—Decide—Tenacity of purpose—Purity is power.

THE MIRACLE OF RIGHT THOUGHT

CONTENTS:—The divinity of desire!—Success and happiness—Working for one thing and expecting something else—Expect great things of yourself—Self-encouragement—The crime of the "Blues" Change the thought, change the man—The paralysis of fear—One with the divine—Getting in tune—New way of bringing up children—Training for longevity.

Special Indian Edition Rupee 1-8-0 each

V. KALYANARAM IYER & Co.,

BOOK-SELLERS AND PUBLISHERS, VEPERY, MADRAS.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)